பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 08 செவ்வாய்க்கிழமை 20.02.2024 கதிர் 105

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு பொதுஜன பெரமுன ஆதரவளிக்காது

## நாமல் ராஜபக்ச எம்.பி. அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைநீக்கும்செயற்பாடு முன்னெடுக்கப்படுமாயின் பொதுஜனபெரமுன அதற்கு ஆதரவளிக்காது என்று அக்கட்சியின்அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷதெரிவித்துள்ளார்.

பாதுக்கவில்நேற்றுநடைபெற்ற நிகழ்வின்பின்னர்ஊடகங்களுக்கு கருத்துவெளியிடும்போதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

பொதுஜனபெரமுன எந்தத் தேர்தலையும்சந்திப்பதற்கு ☞ 2



## இது ரகசியம் அல்ல!

தமிழ்ச் சமூகமே அறநெறிச் சமூகமாக இருந்த காலம் ஒன்றுண்டு. ஆனால் படிப் படியாக பூகோளமயமாக்கல் நுகர்வுக் கலாசாரம் என்பவற்றுக்குள் மூழ்கி அந்த அறக் குணங்களை இழந்து வருகின்றோம். பணம் சம்பாதித்தல், இலாபமீட்டுதல், சுகபோக வாழ்க்கையை அனுபவித்தல் என்பனதான் இப்போது முக்கியமாகிவிட்டது. இந்தப் பீடிகைகள் ஏன் என்று எண்ணுகிறீர்களா?

தெல்லிப்பளையில் தொடங்கப்படவிருந்த அணுக்கதிர் மருத்துவப் பிரிவை அங்கு கொண்டுவருவதற்குக் காட்டப்படும் எதிர்ப்பைப்பற்றிக்கேள்விப்பட்டபோது எனக்குஇதுதான்தோன்றியது. ☞ 2

# கட்சியைவிட்டு வெளியேறும் நோக்கம் எதுவும் இல்லை

## சரத் பொன்சேகா தகவல்

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேறும் எண்ணம் எனக்கு கிடையாது என்று தெரிவித்துள்ள பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா, தான் வழக்குத் தொடுத்ததன் பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருப்பதென கூறுவது தவறானது என்றும் தெரிவித்தார்.

சரத்பொன்சேகாதாக்கல்செய்த ☞ 8

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது இலங்கையில் நடக்கக்கூடியதல்ல

## மல்பத்து பீட மகாநாயக்கர் கருத்து

நிறைவேற்றுஅதிகார ஜனாதிபதிமுறைமையை நீக்குவது நடக்கக்கூடிய காரியமல்ல; அது நிறைவேற்றப்படாதவாக்குறுதி என்று மல்வத்து பீட மாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

உண்மைக்கும், சமாதானத்துக்கும், நீதிக்குமான சுயாதீன ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி அசங்க குணவங்சஉட்படஅதன் உறுப்பினர்கள்மல்வத்து பீட மாநாயக்க தேரரை நேற்றையதினம்சந்தித்து உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மரங்களின் மீது கற்கள் இடம்பெற்றுள்ளமை தவறான செயற்பாடாகும். 2004ஆம் ஆண்டு நாம் மாநாயக்கராகநியமிக்கப்பட்டோம். அன்றிலிருந்து நாம் இந்த விடயத்தினைக் கூறிவருகின்றோம்.

அதாவது, குறித்த காலத்தில் வெளியான பத்திரிகைகளைப் பார்த்தால்அதனை தெளிவாக அறிந்து கொள்ள முடியும். நாம் அதனை தொடர்ச்சியாக வெளிப்படுத் தியுள்ளோம்.

2012ஆம் ஆண்டு இந்த விடயம் ☞ 10

# மாகாண சபை முறைமையை ஒழிக்க லங்காலோகய அமைப்பு வலியுறுத்து

## வேட்பாளர்களிடம் கோரிக்கையாகவும் முன்வைக்கப்படும்

மாகாண சபை முறையை நீக்க வேண்டும் என்ற யோசனையை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களிடமும் முன்வைக்கவுள்ளதாகலங்காலோகய என்றஅமைப்புதெரிவித்துள்ளது.

தென்மாகாண ஆளுநர்லக்ஸ்மன்யாப்பா அபயவர்த்தனவின்மகன் பசன்ட யாப்பா அபயவர்த்தன தலைமையிலானஅமைப்பொன்றே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. ☞ 8

# தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்கப் பேச்சு நடத்துகிறோம்

## மலையகத்துக்கான வீட்டுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி உரை

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பேச்சு முன்னெடுத்துள்ளோம். அதன்பின்னர் மலையக தமிழ் மக்களதும், முஸ்லிம் மக்களதும் பிரச்சினைகளைத்தீர்க்கவேண்டும். இந்தப்பிரச்சினைகளைத் தீர்த்து, இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, முன்நோக்கிப்பயணிக்கவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இந்திய அரசின் நிதி உதவியின்கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்காக 10,000 வீடுகளை நிர்மாணிக்கும் 'பாரத் 'லங்கா' வீடமைப்புத் திட்டத்தின் ☞ 8

# இந்த ஆண்டு இறுதிக்குள் க.பொ.த. உயர்தரப் பரீட்சை

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

இந்த ஆண்டு இறுதிக்குள், உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி நடத்தஏற்பாடுகள்செய்யப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் அடுத்த இரண்டு மூன்று வாரங்களுக்குள் சுற்றறிக்கை மூலம்பாடசாலைகளுக்கு அறிவிக்கப்படும் என்று கல்விஅமைச்சர்கலாநிதி சுசில் பிரேமஜயந்த் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரவித்தார்.

அவர்அங்குமேலும் தெரிவித்ததாவது:

2024ஆம்ஆண்டிற்கான பாடசாலைப் பாடப் புத்தகங்கள் யாவும் விநியோகத்திற்காகஅனுப்பப்பட்டுள்ளன. மார்ச் முதலாம் திகதியாகும் போது பாடசாலைகளில் விநியோகப் பணிகள் நிறைவு செய்யப் ☞ 8

# தேர்தலை நடத்தாமல் மேலும் ஒரு வருடம் பதவியில் இருக்க ஆளும் தரப்பு முயற்சி

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

தேர்தலை நடத்தாமல் மேலும் ஒரு ஆண்டுகாலம்பதவியில் இருக்க ஆளும் தரப்பு முயற்சிக்கிறது என்று சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சுதந்திரமக்கள்சபையின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு நடத்த வேண்டிய ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு ஆளும் தரப்பு முன்னெடுத்த சகல முயற்சிகளும் தோல்வியடைந் துள்ள நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ☞ 8

# ஐ.நாவின் உணவு, விவசாய பணிப்பாளர் ஜனாதிபதி ரணிலுடன் நேற்றுப் பேச்சு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி தொங்யுவுக்கும் இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுத்து இலங்கை மக்களுக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை பாராட்டிய பணிப்பாளர் நாயகம், புதிய சீர்திருத்தங்களினூடாகநாட்டில்பொருளாதார ஸ்திரத்தன்மையைஏற்படுத்துவதற்கான ஜனாதிபதியின் அர்ப்பணிப்புக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இந்தநெருக்கடியான சமயத்தில் இலங் ☞ 2

# தகவல் சுதந்திரத்தை அரசுகள் தடுக்கும்போது அதனை எதிர்த்துக் குரல் கொடுக்கவேண்டும்

## அமெரிக்க துணைச் செயலர் அலன் தெரிவிப்பு

இணைய அணுகலைக்கட்டுப்படுத்துவதன் மூலமும் உள்ளடக்கத்தை தணிக்கை செய்வதன் மூலமும் பொதுமக்களிடமிருந்து தகவல்களைத் தடுக்கும் முயற்சிகளை அரசுகள் தீவிரப்படுத்தும்போது, அதற்கெதிராக நாம் குரல்கொடுக்க வேண்டுமென பொது உறவுகளுக்கான அமெரிக்கத் துணை இராஜாங்க செயலாளர் எலிசபெத் அலன் தெரவித்தார்.

'உலகளாவிய ஊடக பரப்பும் ஜனநாயகத்தின்மீதானஅதன்தாக்கமும்'என்ற தொனிப்பொருளில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் ஏற்பாட்டில் 19 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமெரிக்க பொது இராஜதந்திரத்திற்கானதுணைச் செயலாளர்எலிசபெத்எம். அலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் உரையாற்றியஅமெரிக்க பொது இராஜதந்திரத்திற்கான துணைச் செயலாளர்எலிசபெத்எம். அலன் தெரிவித்தாவது:

இன்று எல்லோருடனும் இங்கு இருப்பது அருமையாகஇருக்கிறது. மேலும் தூதுவர் சங், இலங்கையில் அமெரிக்க மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உங்களது தலைமைத்துவத்திற்கு நன்றி.

ஊடகவியலாளர்கள் நிரம்பிய ஒரு அறையில் நான் நிற்கையில், இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள ஊடகவியலாளர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப்பாதுகாத்ததற்காகவும், அனைத்து குடிமக்களும் தங்களது கருத்துக்களையும் எண்ணங்களை ☞ 2

# 10 வயது மன்னார்ச் சிறுமி கொலைக்கு நீதிகேட்டு நீதிமன்றின் முன் போராட்டம்

தலைமன்னார் கிராமத்தில்பாலியல்வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட 10வயதுச்சிறுமியின் இறப்பிற்கு நீதி கோரி நேற்றுக்காலைமன்னார் நீதிவான் நீதிமன்ற வளாகத்திற்கு முன் மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

சிறுமிக்கு நீதியானதும்விரைவானதுமான நியாயத்தை வழங்க கோரி அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். விசேட நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்று வழக்கை விசாரிக்க வேண்டும் என்றும் அவர்கள்வலியுறுத்தினர்.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதிவழங்கு, விசேட விசாரணை பொலிஸ்குழுவைநியமி, சிறுவர்களை உயிர் போல்காப்போம்,இணையவழி பாலியல் துஸ்பிரயோகங்களைநிறுத்துங்கள், எமது சிறுவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும், போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் அதே நேரம்சிறுமியின்புகைப்படத்தையும் போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

இதேவேளை, ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அதனால்உங்களுடனும்அதனைப் பகிர்ந்துகொண்டேன்.

வடக்கில் உள்ள ஒரேயொரு புற்றுநோய் மருத்துவமனை தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலை. இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு புற்றுநோய்ச்சிகிச்சைக்கானமுதல்தேர்வாகவும் இதுவே இருக்கின்றது. இருந்தாலும் மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் உள்ள வசதிகளில்பலவும்தெல்லிப்பளையில் இல்லை. அவற்றைஇங்குகொண்டு வருவதற்கு நல்லுள்ளங்கள் சில பெரும்முயற்சிஎடுத்துவருகின்றன.

புற்றுநோயாளர்களுக்கு பாதிப்பின் தீவிரத்தை அளவிடுவதற்கான வசதிகள் தெல்லிப்பளையில் இல்லை. அதனைத் தெரிந்துகொள்ள பெரும் தொகைப் பணத்தைச் செலவிட்டு தனியார் வைத்தியசாலைகளையே நாட வேண்டியுள்ளது. இதனால் பண வசதி படைத்தோருக்கே அந்த வசதிகள் கிடைக்கக்கூடியாதாக இருக்கின்றது.

இதையடுத்து புற்றுநோயின் தீவிரத்தை பரிசோதித்து அறிவதற்கான அணுக் கரு சிகிச்சைப்பிரிவு ஒன்றைதெல்லிப்பளையில் அமைப்பதற்கு யாழ்ப்பாண மருத்துவபீடம் முன்வந்தது. புற்றுநோய் சிகிச்சைநிபுணர்களும் அதனைப் பெரு வருப்புடன் வரவேற்றிருந்தனர். இதற்காகசுமார் ஏழரைக்கோடிரூபாய்பெறுமதியில் இதற்கானபரிசோதனைஇயந்திரம் ஒன்று சர்வதேச அணுசக்திக் கழகத்தின் அனுசரனையில் கொள்வனவுசெய்யப்பட்டுதெல்லிப்பளையில் அதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் பொருத்தப்பட்டது.

இயந்திரம் பொருத்தப்பட்டுச் சில ஆண்டுகளாகிவிட்டன. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக இயந்திரத்தை இயக்குவதற்கான காலம் கனிந்து வந்திருக்கவில்லை. தொடர்ந்து ஏதாவது ஒரு தடங்கல் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. எனினும் இந்தச் சிகிச்சை நிலையத்தினை விரைந்துசெயற்படுத்தயாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடமும் நிபுணர்களும்தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர். இது தொடர்பான கூட்டம ஒன்றும் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில்இந்தசிகிச்சைப் பிரிவை இயங்கவிடாது தடுக்கும் முயற்சிகளை தெல்லிப்பளை வைத்தியசாலை நிர்வாகமே முன்னெடுத்துள்ளது என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சிகிச்சை நிலையத்தை தெல்லிப்பளையில் இயங்க அனுமதிக்கவேண்டாம் என்று அமைச்சுக்கு தெல்லிப்பளை வைத்தியசாலை நிர்வாகத்திடம் இருந்துகடிதம்அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச்சிகிச்சை நிலையத்தால் அந்தப்பகுதியில்கதிரியக்கப்பாதிப்பு ஏற்படும் என்று சுட்டிக்காட்டியே சிகிச்சைநிலையத்தைஇடைநிறுத்த வைத்தியசாலை நிர்வாகம் முயற்சிகளைமேற்கொண்டுள்ளது. ஆனால், அதிக கதிரியக்கமுடைய பல்வேறுபுற்றுநோய்சிகிச்சைகளை வழங்கி வரும் தெல்லிப்பளைக்கு இந்தப்புதியஇயந்திரத்தின்கதிரியக்க பாதிப்பு புறக்கணிக்கத்தக்கது, மிகச் சாதாரணமானது என்று இதனோடுதொடர்புடையநிபுணர்கள் என்னிடம் தனிப்பட்ட முறையில் தெரிவித்தார்கள்.

அத்தோடு இந்தச் சிகிச்சைப் பிரிவைக்கையாளப்போகும்யாழ். மருத்துவபீட உத்தியோகத்தர்கள் இந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்றுள்ளனர் என்கிறபோதும் இலங்கை அணுசக்தி அதிகார சபையின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்களின் கீழேயே இதன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதனால் இந்தச் சிகிச்சை நிலையத்தால் பாதிப்பு ஏற்படும் என்கிற அச்சம் தேவையற்றது என்றும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச்சிகிச்சைப்பிரிவுஇயங்கத் தொடங்கினால் இத்தகைய பரிசோதனைகளை ஏற்கனவே செய்துவரும் சில தனியார் ஆய்வுகூடங்களுக்கு உழைப்புப் பிழைத்துப் போய்விடும் என்பதே எதிர்ப்புக்கான காரணம் என்றும் தெரிவிக்கப்படுகின்றன. கொழும்புக்கு அனுப்பப்பட்ட ஆட்சேபனைக் கடிதம்கூட இத்தகை தனியார் ஆய்வுகூட வைத்திய நிபுணர் ஒருவரின் உதவியுடனேயே தயாரிக்கப்பட்டதாகவும் தககவல். அதிலும்அந்தஆட்சேபனைக்கடிதம் வடக்கில் உள்ள சுகாதாரத்துறை உயரதிகள்யாருக்கும்எழுதப்படாமல் நேரடியாகவே கொழும்பில் உள்ள அமைச்சருககு கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது.

தங்கள் பிழைப்புக்காக ஏழை பாளைகளின் வயிற்றிலடிக்கவும் தயாராகவே இருப்பார்கள் என்பதையே இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றதுஅதனால்தான் தனது அறச்செழுமைக் குணத்தை தமிழ்ச் சமூகம் இழந்துவிட்டது என்று சொன்னேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாராகவே உள்ளது. எந்த தேர்தலை சந்திப்பதற்கும் எமக்கு எந்தவிதமான தயக்கங்களும் இல்லை. ஆனால் தற்போதைய நிலையில் அரசியலமைப்புக்கு அமைவாக ஜனாதிபதி தேர்தலே நடைபெறவுள்ளது.

ஆகவே, அந்த தேர்தல் அறிவிக்கப்பட்டால் நாம் உரியவாறான முடிவுகளை முன்னெடுப்போடும். அதேநேரம், அண்மையறநாட்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் சம்பந்தமாக உரையாடப்படுகின்றது. நாம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு தயராகவே உள்ளோம்.

ஆனால் அது ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு அல்லது காலம் தாழ்த்துவதற்காக பயன்படுத்தப்படுவதை நோக்கக் கொண்டிருக்குமாயின் அதற்குநாம் ஒருபோதும் ஒத்துழைப்புக்களை வழங்கப்போவதில்லை என்றார்.

## ஐ.நாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைஅரசாங்கத்திற்கும்மக்களுக்கும் உணவுமற்றும்விவசாய அமைப்பு தொடர்ந்து பூரண ஆதரவை வழங்கும் என்றும் பணிப்பாளர் நாயகம் உறுதியளித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்படும்வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகத்திற்குவிளக்கமளிக்கப்பட்டது.

இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதில் விவசாயம் முக்கிய துறையாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடையச்செய்வதற்குஉணவு மற்றும் விவசாய அமைப்பின் பங்களிப்பையும் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் சர்வதேச உறவுகள் தொடர்பான பணிப்பாளர் தினுக் கொழும்பகே ஆகியோரும் இணைந்து கொண்டனர்.

## தகவல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் வெளிப்படுத்தும் உரிமையை அனுபவிப்பதை உறுதிசெய்ததற்காகவும்நான்உங்களுக்கு நன்றிகூற விரும்புகிறேன்.

கடினமான நேரங்களிலும், தொடர்ந்துமுன்னோக்கிச்செல்வதை நீங்கள் தொடர்வதுடன் கடினமான கேள்விகளையும் கேட்கிறீர்கள். உண்மையைத் தேடுவதற்கும், உயரமானமுகடுகளிலிருந்துஅதை உரத்துக்கூறுவதற்குமானஉங்களது அர்ப்பணிப்பானது ஜனநாயகத்தின் ஒருமுக்கியஅம்சமாகவிளங்குகிறது. உங்களது பணியினை நான் உண்மையிலேயேபாராட்டுகிறேன்.

ஒரு ஜனநாயகத்தில் ஊடகங்களின் பங்கு பற்றிய இன்றைய தலைப்புடன் தொடர்புடையதென நான்கருதும்ஒருகதையினைக்கூறி எனதுஉரையினைத்தொடங்குவது மிகவும்பொருத்தமானதாகஇருக்கும் என நான் நினைக்கிறேன்.

ஒரு நூற்றாண்டிற்கு முன்பு, ஊழலை அம்பலப்படுத்தும் சமூகப் பிரச்சினைகளை ஆராய்ந்த பத்திரிகையாளர்களைக் குறிப்பிடுவதற்கு 'மக்ரேக்கர்' என்ற சொற்பதத்தினை அமெரிக்க ஊடகங்கள் உருவாக்கின.

இந்தச் சொற்பதம், இந்த ஊடகவியலாளர்களை வெறும் 'வதந்தி பரப்புபவர்கள்' என்று முத்திரைகுத்திசற்றேஎதிர்மறையான பொருளை வெளிப்படுத்தினாலும், இன்று அவர்களை புலனாய்வு ஊடகவியலின் முன்னோடிகள் என நாம் கௌரவிக்கின்றோம்.

அமெரிக்க வரலாற்றில் குறிப்பிடத்தக்க சமூக மற்றும் அரசியல் சீர்திருத்த காலமான முற்போக்கு சகாப்தத்தை உருவாக்குவதில்இந்தமக்ரேக்கர்கள் ஒரு முக்கிய பங்கினை வகித்தனர்.

ஊழலை வெளிச்சம் போட்டுக் காட்டி பொறுப்புக்கூறல் மற்றும் சீர்திருத்தத்திற்கான நாடு தழுவிய ஒரு கோரிக்கையினைத் தூண்டிய பணியினை மேற்கொண்ட லிங்கன் ஸ்டெஃபென்ஸ் போன்ற நபர்களைக் குறிப்பிட்டு சமூகத்தின் குறைபாடுகளில் அவர்கள் கவனம் செலுத்துவதை விமர்சித்து ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் கூட அவர்களை 'மக்ரேக்கர்கள்' என்று குறிப்பிட்டார்.

1904 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஸ்டெஃபென்ஸின் புத்தகமான'த ஷேம் ஒஃப் த சிட்டீஸ்', அரசியல்தலைவர்கள், வணிகங்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு இடையிலான மோசமான தொடர்புகளை எடுத்துக்காட்டி அமெரிக்க நகரங்களில் நிலவிய ஊழலை வெளிக்கொணர்ந்ததற்காகஅவரைப் புகழ் பெறச்செய்தது.

அரசுமற்றும்பெருநிறுவனங்கள் என்பன பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டியதன் அவசரத் தேவை குறித்து விமர்சன ரீதியான விழிப்புணர்வை அவரது அச்சமற்ற ஊடகவியல் ஏற்படுத்தியது. ஆளும் தரப்பின் ஒரு மக்கள் தொடர்பு அதிகாரியாக ஸ்டெஃபென்ஸ் செயற்படவில்லை; எவ்வளவு விரும்பத்தகாததாக இருந்தபோதும் உண்மையை வெளிக்கொணர்வதே அவரது பங்காகஅமைந்தது.ஸ்டெஃபென்ஸ் முன்வைத்த அப்பட்டமான உண்மைகளுக்கு முகங்கொடுத்த அமெரிக்க அதிகாரிகளும் பொதுமக்களும் ஒரு முக்கிய கேள்வியை எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர்: 'இதுபோன்ற நாடாகவா நாங்கள் இருக்க விரும்புகிறோம்?' என்ற அந்தக் கேள்விக்கு இல்லை என்ற பதில் ஒருமித்த பேரொலியாக வெளிப்பட்டது.

ஸ்டெஃபென்ஸின்பணியானது தவறுகளை மட்டும் அம்பலப் படுத்தவில்லை, அது சீர்திருத்தத் திற்கான நாடு தழுவிய ஒரு கோரிக்கையினைத் தூண்டியதுடன் அதிகாரமானது பொறுப்புக்கூறலுக் குட்பட்டிருப்பதை உறுதி செய்வதில் புலனாய்வு ஊடகவியல் வகிக்கும் முக்கியபங்குதொடர்பானஒருஉரையாடலைப் பேணிவளர்ப்பதிலும் ஒரு இன்றியமையாத பங்கினை அது வகித்தது.

பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பன அடிப்படை மனித உரிமைகள் மட்டுமன்றி, ஒரு நாட்டின் அபிவிருத்தியிலும்வளர்ச்சியிலும் அவை முக்கிய பங்காற்றுகின்றன என்பதையும் இந்தக் கதை எடுத்துக்காட்டுகிறது.

உலகளாவியஊடகவெளியானது எவ்வாறுஜனநாயகத்தை ஆதரித்து அமைதியான, நியாயமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களை வளர்க்கிறது என்பது பற்றி நான் கூற விரும்பும் முக்கிய கருத்திற்கு இது என்னை இட்டுச் செல்கிறது.

எனது மனதில், அந்தத்தொடர்பு தெளிவாக உள்ளது: ஒருஅரசாங்கம் தனது குடிமக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை கட்டுப்படுத்தும்போது, அந்நாட்டின் எதிர்காலமும் அபிவிருத்தியும் இயல்பாகவே பாதிக்கப்படும்.

உலகளாவிய ரீதியில், ஊடக சுதந்திரத்திற்கு எதிரான தீவிரமானமற்றும்அதிகரித்துவரும் சவால்களை நாம் காண்கிறோம். நிகழ்நிலையிலும்அகல்நிலையிலும் பத்திரிகை சுதந்திரத்திற்காக வாதிட்டு, உலகெங்கிலும் உள்ள ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்து கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில்அமெரிக்காஉறுதியாக இருக்கிறது.

துரதிஷ்டவசமாக, இந்த அத்தியாவசிய சுதந்திரங்கள் உலகளாவியரீதியில்அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. இலங்கையில் எழுப்பப்பட்ட கரிசனைகளும் இதிலடங்கும்.

இணைய அணுகலைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் உள்ளடக்கத்தை தணிக்கை செய்வதன் மூலமும் பொதுமக்களிடமிருந்துதகவல்களைத்தடுக்கும் முயற்சிகளை அரசாங்கங்கள் தீவிரப்படுத்தும்போது, அதற்கெதிராக நாம் பேச வேண்டும்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# சரத் பொன்சேகாவை இடைநிறுத்த ஐக்கிய மக்கள் சக்திக்குத் தடை

## கொழும்பு மாவட்ட நீதிமன்று உத்தரவு

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ஐக்கிய மக்கள் சக்தியில் வகிக்கும் பதவிகள் மற்றும் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்த தடைவிதித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, பொது செயலாளலர் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பொருளாளர் ஹர்ஷ டி சில்வா ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்ட தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த பின்னர் நீதிமன்றம் மேற்படிஉத்தரவைநேற்றையதினம் பிறப்பித்துள்ளது.

14 நாட்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மனு மீதான விசாரணைகளும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா, ஐக்கிய மக்கள் சக்தியில் தவிசாளர் பதவியை வகித்து வரும் நிலையில் அப்பதவியிலிருந்து அவரை நீக்குவதோடு, கட்சியின் அடிப்படை உறுப்புரிமையையும் நீக்குவதற்கு முனைப்புக்கள் காண்பிக்கப்பட்ட நிலையிலேயே அவர் நீதிமன்றத்தினை நாடியிருந்தார்.

# தொழிற் பயிற்சிகளை வழங்க 'ஸ்மார்ட் யூத்' திட்டம் அறிமுகம்

இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சிகளை வழங்கி வெளிநாடுகளுக்கு சிறந்த தொழிலாளர்களைஅனுப்புவதற்காக 'ஸ்மார்ட் யூத்' திட்டத்தை ஆட்சியாளர்கள் தொடங்கியுள்ளனர்.

வெல்லவாய பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற 'இலங்கையை வெற்றிகொள்வோம' நடமாடும் மக்கள் சேவையின் இரண்டாம் நாள் நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் தொழில் மற்றும்வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

நாட்டில் இளைஞர்களை முன்னேற்றுவதற்காகவே ஸ்மார்ட் யூத் திட்டத்தை தொடங்கினோம். மனிதவலு மற்றும்வேலைவாய்ப்பு திணைக்களத்துடன் இணைந்து பிரதேச செயலாளர்கள் ஊடக சகல பிரதேச செயலகத்திலும் 'ஸ்மார்ட் யூத்'குழுவைஅமைத்துவருகிறோம். எதிர்காலத்தில் பிரதேச செயலாளர்கள் மூலம் கிராம சேவகர் பிரிவுகளிலுமிருந்து குறைந்தது பத்து பேரைகொண்ட குழுவை இணைக்குமாறு கேட்டுக்கொள்வோம்.

இன்றுநாம்ஆரம்பித்துஇருப்பது ஒரு தேசிய வேலைத்திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் தொழிற் பயிற்சிகளை பெற்று வரும் இளைஞர்களை விரைவில் வேலைக்கு அமர்த்துவதும் நவீன உலகிற்குஏற்றதொழிலாளர்குழுவை உருவாக்குவதும் எங்கள் நோக்கம்.

அதற்கு மாறாக வரலாற்றை குறை சொல்லி கல்வி கற்பதில் அர்த்தமில்லை. 20 ஆண்டுகளுக்கு முன்பே கல்வித் திட்டம் மாற்றப்பட்டிருக்கவேண்டும். 15ஆண்டுகளுக்கு முன்பேபாடத்திட்டம்மாற்றப்பட்டிருக்க வேண்டும்.

15 ஆண்டுகளுக்கு முன்பே தொழிற்கல்வி மாற்றப்பட்டிருக்க வேண்டும். அவைநடைபெறாததால் இப்போது குற்றம் சாட்டுவதில் அர்த்தமில்லை.

இளைய தலைமுறையை காப்பாற்ற வேண்டும். எதிர்கால உலகிற்கு உங்களை தயார் படுத்துகிறோம். உங்களுக்கு 10,000 வேலைவாய்ப்புக்கான பயிற்சிகளைஅளிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். அதற்காக அனுசரணையை ஜனாதிபதி நிதியம் அளிக்கும்.

அரசியல்வாதியிடம் சென்று வேலைவாய்ப்பு கொடுங்கள் என்று கேட்கத் தேவையில்லை. அதனால் உங்களை வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ற நபராக மாற்ற விரும்புகிறோம். நீங்கள் உங்களை மனரீதியாக பலப்படுத்தி வேலைவாய்ப்புகளுக்கு தயார்படுத்திக் கொள்ளவே இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

ஸ்மார்ட் யூத் திட்டம் என்பது பல்வேறு தொழிற் பயிற்சிகளை வழங்கும் ஒரு திட்டமாகும். எதிர்காலத்தில்உலகில்பராமரிப்பாளர் தாதியர் வேலைவாய்ப்புகளுக்கான வெற்றிடம் ஏற்படும். அதற்கான பயிற்சிகளை பெற வேண்டும். இலங்கை சுற்றுலா சபையினால் ஹோட்டல்முகாமைத்துவ பாடநெறி பயிற்சி 150 மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகிறது.

ஹோட்டல் முகாமைத்துவ பாடநெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு ஷங்ரிலா ஹோட்டலில்வேலைவாய்ப்புவழங்கப்பட உள்ளது .அத்துடன் ஐ.டபிள்யூ.எச் என்ற பெரிய நிறுவனத்துடன் கலந்துரையாடினேன்.

துபாய் உள்ளிட்ட உலகெங்கிலும் உள்ள அவர்களது ஹோட்டல்களில் பணிபுரிய ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் 100 தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கஅவர்கள்தயாராகஉள்ளனர்.

ஹோட்டல் துறையில் பெரிய வெற்றிடம் காணப்படுகிறது. செவிலியர் துறையில் ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கொரியாவின் கப்பல் கட்டும் துறையில். இஸ்ரேலில் விவசாய துறையில் தற்போது இருபதாயிரம் வேலை வாய்ப்புக்கள் உள்ளன. நல்ல தகுதியான சம்பளம் வழங்கப்படும். பெரும் திட்டங்களுக்குதிறமையான தொழிலாளர்கள் தேவை. நவீன உலகத்திற்கு ஏற்ற தொழிற்பயிற்சியைப் வழங்கி வெளிநாடுகளுக்கு சிறந்த தொழிலாளர்களை அனுப்புவதற்குநாம்நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# முஸ்லிம் அதிகாரிகளைப் புறக்கணிப்பது கிழக்கு ஆளுநரின் கவனயீனமா இனவாதமா?

## கிழக்கின் கேடயம் எஸ்.எம்.சபீஸ் கேள்வியெழுப்புகிறார்

(அபு அலா)

கிழக்கு மாகாணத்தில் ஆளுநர், பிரதம செயலாளர், 05 அமைச்சுக்களின் செயலாளர்கள் என முக்கிய 7 பதவிகள் இருக்கின்றன. காலாகாலமாக இப்பதவிகள் இனப்பரம்பலுக்கு ஏற்ப பங்கீடுகள் செய்யப்படுவது வழக்கம். அந்த வகையில் ஆளுநர் சிங்கள இன சகோதரர் நியமிக்கப்படுகின்ற வேளையில் ஏனைய பதவிகளுக்கு முறையே 3 முஸ்லிம், 2 தமிழ், ஒரு சிங்களம் என்ற அடிப்படையில் இன சகோதர அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றமை தார்மீகமாகும். இது அவ்வாறில்லாமல் இம்முறை முற்றாக மீறப்பட்டுள்ளது என கிழக்கின் கேடயம் பிரதானியும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

கிழக்கின் கேடயம் சார்பில் அவர் வெளியிட்டுள்ள தனது ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிழக்கு மாகாண முஸ்லிம் அதிகாரிகள் புறக்கணிக்கப்படுவதற்கு முக்கிய காரணம் எமது அரசியல் தலைவர்கள் எடுத்துக் கூறாமை அல்லது ஆளுநர் வரலாறுகளை அறிந்து கொள்ளாமை அல்லது இனப்பற்றில் சுயத்தை இழந்தமை எனக் கூறலாம்.

200 வருடங்கள் இந்நாட்டில் பெரும் கஸ்டத்துக்கு மத்தியில் வாழ்ந்த மக்களுக்கு வாக்குரிமையைப் பெற்று கொடுத்தார் மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமான். அதன்பின்னர் இன்று வரை அந்த மக்கள் முழுமையான வாழ்க்கைச் சுமடெண்ணுக்கு அருகிலும் வரவில்லை. இவ்வாறானதொரு சமூகத்தில் இருந்து ஆளுநர் பதவியை பெற்றுக்கொண்ட செந்தில் தொண்டமான் எவ்வளவு கவனமாக நடந்திருக்க வேண்டும்.

அரசியல் பழிவாங்கல் நடைபெறும் மாகாணத்தில் தனது நடவடிக்கைகள் மூலம் இவ்வாறுதான் மக்கள் ஆட்சி செய்யப்பட வேண்டும் என்ற முன்மாதிரியை காட்டியிருக்க வேண்டும் அது நடைபெறவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும். இன்னும் காலம் தாழ்ந்து போகவில்லை விரைந்து செயற்பட்டு தவறுகளை திருத்தி சிறந்த ஆளுநர் என்பதை செய்து காட்ட வேண்டும்.

மீண்டும் இதே தவறு நடைபெறும் என்றால் கிழக்கு மாகாண பள்ளிவாசல்கள் சம்மேளனம் மற்றும் நிறுவனங்கள் அமைப்பிடம் முறையிடுவோம்.

அங்கே எங்களது மக்களை உங்களின் கூட்டங்களை புறக்கணிக்க தீர்மானம் மேற்கொள்ள வேண்டுவோம் என தனது ஊடக அறிக்கையில் இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ளார். (05)

# இறக்காமம் பிரதேசத்தில் இளைஞர் கழகச் சம்மேளனம் தெரிவு





(நூருல் ஹுதா உமர்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமானது நாடளாவிய ரீதியில் இளைஞர் யுவதிகளின் ஆற்றல் திறன்களை வெளிக்கொண்டுவரும் நோக்குடன் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக இளைஞர், யுவதிகளின் விளையாட்டு, கலை கலாசார நிகழ்வுகள், பயிற்சி மற்றும் போட்டிகள், தொழில் பயிற்சிகள், கல்வி வழிகாட்டல், தலைமைத்துவம், தேசிய நிகழ்வுகள், இளைஞர் நாடாளுமன்றம், சர்வதேச நாடுகளுக்கிடையிலான இளைஞர் பரிமாற்ற வேலைத்திட்டம் பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

மேற்படி வேலைத்திட்டங்கள் யாவும் அடிப்படையில் பிரதேச மட்ட இளைஞர் கழகங்கள் மூலம் தெரிவு செய்யப்படும் பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் தேசிய மட்ட சம்மேளன கட்டமைப்பின் ஊடாகவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக இறக்காமம் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு இளைஞர் சேவைகள் அதிகாரி ஏ.ஆர். நியாஸின் நெறிப்படுத்தலில் இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு அம்பாறை மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் திருமதி கங்கா சாகரிக தமயேந்தி கௌரவ அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். மேலும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஆர். எம். சிறிவர்த்தன மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர் றகீப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முன்னாள் இளைஞர் கழக சம்மேளனத் தலைவர்கள், அனைத்து இளைஞர் கழகப் பிரதிநிதிகள் பங்கேற்புடன் 2024 ஆம் ஆண்டுக்கான பிரதேச மட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் நிர்வாகத் தெரிவு சுமுகமான முறையில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது இறக்காமம் பிரதேச சம்மேளனத்தின் தலைவராக ஹைற 20 இளைஞர் கழகத்தின் உறுப்பினர் ஏ. நிஜாஸ், உப செயலாளராக சட்டத்தரணி எம்.ஏ. நிப்ரி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

மேலும் சம்மேளனத்தின் ஏனைய பொறுப்புகளுக்கான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் பிரதேச சம்மேளனத்தின் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலைந்துரையாடப்பட்டதுடன் முன்மாதிரி மிக்க இளைஞர் சம்மேளனமாக செயற்படுவதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. (05)

# போதைப்பொருள் பாவனை குற்றங்களை தடுப்பது குறித்து விழிப்புணர்வுக் கூட்டம்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய ஏற்பாட்டில் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் குற்றச் செயல்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது தொடர்பான சமூக மட்டத்தில் உள்ள பல்வேறு தரப்பினருடனான விழிப்புணர்வுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை கல்முனை இருதயநாதர் மண்டபத்தில் ஆரம்பமானது.

இந்நிகழ்வானது கல்முனை பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர் தலைமையில் நடைபெற்றதுடன் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலியும் விசேட அதிதியாக கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர்(ஏ.எஸ்.பி) கே.எம்.லசந்த புத்திகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது நிகழ்வு பொது மத அனுஸ்டானத்துடன் ஆரம்பமாகியதுடன் வரவேற்புரையை கல்முனை பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான ஏ. எல் ஏ. வாஹிட் மேற்கொண்டு நிகழ்வை நெறிப்படுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதான வளவாளராக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம். எம். ஜி. பி. எம். றஸாட் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்தக்கலந்துரையாடலில் பிரதேச சமூக பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகள், சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் பாவனைகள், சிவில் குற்றங்கள், முரண்பாடு, குடும்ப பிரச்சினைகள் போன்ற பல்வேறுபட்ட தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கூட்டத்தில் கலந்து கொண்ட பல தரப்பினரிடம் கலந்துரையாடப்பட்டன.

மேலும் சமூக பாதுகாப்பு நிறுவனமான குடும்பம், பாடசாலை, சமய நிறுவனம், சமூக அமைப்பு நிறுவனத்தின் வகிபாகம், எதிர்காலத்தில் சமூகத்துக்கும் பொலிஸ் பாதுகாப்பு இடையிலான சமூக இடைவினையை அதிகரித்தல், பாடசாலை மாணவ, மாணவிகள் ஒழுக்கம், வீதி போக்குவரத்து விதி முறை தெளிவுபடுத்தல், சமூக பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்துதல், சமூக சேவை திட்டங்கள், பொது சிரமதான பணிகள் நடைமுறைப்படுத்தல் போன்ற தீர்மானங்கள் முன்மொழியப்பட்டன.

அத்துடன் பிள்ளைகள் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவதற்கு பெற்றோரின் கவனயீனமும் காரணமாகும்.இவ்விடயத்தில் பெற்றோர்கள் ஒத்துழைக்காவிடின் இந்த போதைப்பொருள் ஒழிப்பு விடயத்தில் முன்னேற்றமானது ஏற்படப் போவதில்லை. இதைவிட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை தமது பிள்ளைகள் போன்று கண்காணிக்க வேண்டும்.இது தொடர்பில் பல கலந்துரையாடல்களை மேற்கொள்ள இருக்கின்றோம் என அதிதிகளாக கலந்து கொண்டவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. (05)

மேலும் இந்தக் கலந்துரையாடலில் போதைப்பொருளின் தாக்கங்கள் , போதைப்பொருளைத் தடுப்பது எவ்வாறு, போதைப்பொருள் பொருளாதாரத்தை எவ்வாறு சீரழிக்கின்றது, போதைப்பொருளை எவ்வாறு தடுக்கலாம் ,உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் அதிதிகள் உரைகளை நிகழ்த்தினர்.

குறித்த கலந்துரையாடலில் பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச்செயலாளர் எம்.ஐ. எம் ஜிப்ரி(சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்) உட்பட பொலிஸ் ஆலோசனை குழு உறுப்பினர்கள் மற்றும் மதகுருமார்கள், அதிபர்கள், மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், விளையாட்டுக்கழகங்கள், வர்த்தகர்கள் ஓட்டோ உரிமையாளர்கள், பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகன சாரதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

## கிளிநொச்சி பாடசாலைக்கு

(நூருல் ஹுதா உமர்)

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாடசாலை அதிபர் ஜெயலட்சுமி மாணிக்கவாசகம் தலைமையில் பாடசாலையின் மண்டபத்தில் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான எல். கஜரூபன், எம். காந்தன், ஆர். ஜெகனாதன், அவுஸ்திரேலியாவில் இருந்து வருகைதந்த தி. ஜெயந்தன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இப்பாடசாலை தேசிய சுற்றாடலுக்கான 'சுவசர தக்சலாவ' ஜனாதிபதி விருதை தொடர்ச்சியாக 2015, 2016, 2017 என மூன்று முறை பெற்றுள்ளதுடன் பொலித்தீன் அற்ற பாடசாலையாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கேரளக் கஞ்சா சிக்கியது சுன்னாகத்தில் நபர் கைது

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுன்னாகம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு இரண்டு கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இதன்போது, சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர .(05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## நியாயமற்றசெயல்

எந்தவொரு நாட்டிலும் சுகாதாரத் துறை மிக முக்கியமானது. சமீபத்தில், இலங்கையின் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கைது செய்யப்பட்டுசிறையில்அடைக்கப்பட்டார்.அடைக்கப்பட்டதும் அவர்சிறைச்சாலைவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டார் என்பது ஒருபுறமிருக்க, மனித நுகர்வுக்குத் தகுதியற்ற மருந்துகளை இறக்குமதி செய்வதில் மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன என்பது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இப்படிப்பட்ட நேரத்தில்தான் நாட்டின் அரச மருத்துவமனைகளில் பணியாற்றும் சுகாதார ஊழியர்கள்வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் வைத்தியசாலைப் பணிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. 75 தொழிற்சங்கங்கள் இணைந்து நடத்திய இந்தப்போராட்டம் இப்போது கைவிடப்பட்டுள்ளது. தமது நியாயமற்ற கோரிக்கைகள் தொடர்பில் சுகாதாரத்துறை ஊழியர்கள் அமைச்சருடன் நடத்திய பேச்சுக்கள் வெற்றிகரமாக அமைந்ததைத் தொடர்ந்து போராட்டத்தை அவர்கள் கைவிட்டுள்ளனனர்.

வாழக்கைச் செலவு உயர்வு காரணமாக மாதாந்தம்ச் சம்பத்தை உயர்த்தி வழங்கவேண்டும் என்று இந்தச் சுகாதாரத் தொழிற்சங்கள் கோரிக்கை முன்வைத்திருக்கின்றன.

அரசபணியாளர்களுக்குஏற்கனவேவழங்கப்பட்டுள்ள 10 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாகவே இந்தச் சம்பள அதிகரிப்பை அவர்கள் கேட்கின்றனர். இது நியாயமற்றது. பொ–ருளாதார நெருக்கடியால் முழு மக்களுக்குமே பெரும் நெருக்கடிகளையும் கடும் பாதிப்பையும் எதிர்கொண்டுள்ள நிலையில் தமக்கு மட்டும் அதிகூடிய சம்பள உயர்வை அவர்கள் வலியுறுத்துவது ஏற்புடையதாகத் தெரியவில்லை.

நாட்டின் மற்ற சாதாரண குடிமக்களைப் போலவே, உயரும் வாழ்க்கைச் செலவைக் கையாள்வதில் அரசு மருத்துவமனைகளில்உள்ளசுகாதாரப்பணியாளர்களும் அதே சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. அதேபோன்றேமற்றவர்களும்தம்மைப் போன்றவர்களே என்பதைச் சுகாதார ஊழியர்கள் கவனத்தில்கொள்ளவில்லை என்பதே ஏமாற்றம். அவர்களின் சம்பள உணர்வு கோரிய போராட்டத்தால் குழந்தைகள் மற்றும் நோயளிகள் உட்படப் பலரும் ஆபத்தை எதிர்கொண்டனர். இது எந்தவிதத்திலும் நியாயமானது அல்ல.

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்கள், அன்றாடக் கூலியை நம்பி சமூகத்தின் ஏழ்மையான பிரிவினரிடையே இருந்து வருகிறார்கள் என்பதை மறந்துவிட முடியாது. இந்தத் தொழிலாளர்கள் அதிகபட்ச ஊதியமாக மாதாந்தம் 45,000 ரூபாயையே சம்பாதிக்கிறார்கள். இவர்களைப் போன்ற தொழிலாளர்களே இந்த நாட்டில் உள்ளவர்களில் 50 சதவீதத்தினர்.

தோட்டத் துறையில் நிலைமை இன்னும் மோசமாக உள்ளது. அங்கு தொழிலாளர்களுக்கு நாளொன்றின் வருமானம் ரூபாய் 1,000 மட்டுமே. அதுவும் மாதத்திற்கு 23 நாட்களுக்கும் குறைவாகவே வேலை கிடைக்கும். இந்தத் தொழிலாளர்கள் நமது அந்நியச் செலாவணி வருவாயில் பெரும் பங்கைக் கொண்டு வருகிறார்கள். ஆனால், தோட்டங்களில் பொதுப் போக்குவரத்து அமைப்புகள்இயங்காததால்தோட்டத்தொழிலாளர்களின் குழந்தைகள்பலமைல்கள்தூரம்நடந்துபள்ளிகளுக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

ஆனாலும், சுகாதாரப் பணியாளர்களுக்கு ரூ. ஒரு மாதத்தில் சம்பளத்துடன் பயணச் செலவுகள், இதர கொடுப்பனவுகள் என்பனவும் வழங்கப்படுகின்றன. அப்படியிருந்தும் அவர்கள் இன்னும் இன்னும் சம்பள உயர்வு கேட்கிறார்கள். தனியார் துறையில் சம்பள உயர்வோ, மேலதிகக் கொடுப்பனவோகூடக் கிடையாது. தொழில் பாதுகாப்பும் கிடையாது. அரச வேலையில் அத்தகைய உத்தரவாதங்களை எல்லாம் பெற்றுக்கொண்டும் தமது கோரிக்கைகளுக்காக நோயாளர்களின் உயிர்களைப் பணயம் வைக்கும் வகையில்சுகாதாரஊழியர்கள்போராட்டம்நடத்துவதைத் தவிர்க்கவேண்டும்.

# கற்பகதரு என்னும் அற்புதம்
# பனங்கொட்டை வருகிறது

அங்கம் – 29




மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.





பனை விதைகளை எடுத்து நோக்கினால் அவை தொண்ணூறு விகிதத்துக்குக்கு மேல் முளைக்கும் நிலை யிலேதான் இருக்கின்றன என்று அறந்திட முடிகிறது. பாத்தியிலே அடுக்கப்பட்ட பனங்கொட்டை-கள் நிலத் தில் விடுகின்ற வேரானது நாங்கள் சுவைத்து உண்ணும் கிழங்க-ாகவே வருகிறது என்பதுதான் மிகவும் முக் கிய நிலையாகும்.பாத்தியில் அடுக்க-ப்பட்ட பின்னர் கிழங்கு பிடுங்கும் நிலை மூன்று மாதங்களின் பின் னரே வாய்க்கிறது. நிலத்திலிருந்து பனக்கிழங்கினைப் பிடுங்கி வெளியே எடுக்கும் பொழுது பேரானந்த மாகவே இருக்கும். தோலுடன் கிழங்கு வந்து எம்மைப் பார்ர்த்தபடி நிற்கும். கிழங்கினைப் பாதுக-ாக்கும் கவ சத்தைப் போலவே மேல்த்தே-ாலிருக்கும். அந்தத் தோலினைத் தோகை என்று பெயரிட்டு அழைப்பார் கள்.வெளித் தோலான தோகையினை உரித்தபின் கிழங்கினைப் பார்க்கையில் பரவசமே ஏற்படும். அதன் திரட்சியும், நிறமும் மனத்தை நிறைத்தே விடும்.




பனங்கிழங்கினைக் பச்சையாகவே இரண்டாகக் கிழித்து வெய்யிலில் காய விட்டு , பின்னர் அதனை மாவா க்கி பலவிதமாகச் சாப்பிடுகிறோம்.இது ஒரு முறையாகும். பானைகளில்



நீரில் வைத்து அவித்தும் சாப்பிடு வதும் ஒரு முறையாகும். அவித்த கிழங்கினை வெய்யிலில் காயவைத்து பின் எடுத்துச் சாப்பிடு வதும் ஒரு முறையாகவே இருக்கிறது.மூன்று நிலைகளில் பனங்கிழங்கினை சாப்பிடுவதற்கு பழக்கப் படுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் இங்கு முக்கிய கருத்தெனலாம்.

பச்சைப் பனங்கிழங்கினை வெய்யிலில் காயவைத்து எடுத்த பின்னர் அதனை மாவாக்கி எடுக்கும் பொழு து , அந்த மாவினையே ஒடியல் மா என்கிறோம். இந்த மாத்தான் பல உணவுப் பதார்த்தங்களைச் செய்வத ற்கு மூலமாக வந்-தமைகிறது என்பது முக்கியமாகும்.

ஒடியற் கூழ் என்றவுடன் நாவெல்லாம் ஊறுகிறதல்லவா ? ஒடியல் மாதான் இக்கூழின் கதாநாயனாகும். ஒடி யல்மாவுடன் அவரவர்க்கு விரும்பிய காய்கறிகளைச் சேர்த்து மரக்கறிக் கூழ் காய்ச்சுவார்கள். பயற்றங் காய், கீரை, பலாக்காய், மரவள்ளி, பலாக்கொட்டை ஆகியன சிறப்பாக இடம்பெற்றிருக்கும். உப்புப்,புளி, உ றைப்புடன் இந்தக் கூழிருக்கும். சுடச் சுடக் குடிக்கும் பொழுது எற்படும் சுவையினைச் சொல்லவே முடி யாது. அக்கூழினைக் குடித்துச் சுவைத்து உணர்ந்தால்த்தான் அதனை மனமிருத்-திட முடி யும்.மரக்கறிக ளுக்குப் பதிலாக அசைவம் விரும்புவர்கள் கூழுக்கு எந்தவிதமானவை பொ-ருந்துமோ அவற்றை அவர்கள் போட்டுக் கூழைச் செய்து சுவைத்து மகிழுவார்கள்.

ஒடியல் மாவிலே கூழ் காய்ச்சிக் குடிப்பதை ஒரு கூட்டமாகவே சேர்ந்து மகிழுவதையும்காணக் கூடியதா கவே இருக்கிறது. கூழ் காய்ச்சவேண்டும் என்னும் எண்ணமானது எழுந்தவுடனேயே அங்கு ஒன்று சேர்க்கும் நிலை தான் முதலில் அமையும். அதன் பின்னர்தான் எத்தகைய கூழினைக் காய்ச்சுவது என்று - அதாவது மரக்கறிக் கூழா அல்லாத கூழா என்று தீர்மானம் எடுக்கப்படும். மேற்குலக நாடுகளிலே கூட்டமாகச் சேர்ந் திருந்து குடித்து மகிழ்வதுபோல , எங்கள். பிரதேசங்களிலே ஒடியற் கூழ் காய்ச்சிச் சேர்ந்திருந்து குடித்து மகிழும் நிலையினை எடுத்துக் கொள்ளலாம். அந்தளவுக்கு ஒயற் கூழானது ஒரு சமூகத்தின் உணவாக விரு ம்பி எடுக்கும் உணவாக வே அமைந்திருக்கிறது என்பது கருத்திருத்த வேண்டியதேயாகும். உறவினர்கள் ஒன்றுகூடிக் ஒடியற் கூழ் குடித்து மகிழ்வதும் நிகழ்ந்த படியே இருப்பதுவும் குறி-ப்பிடத்தக்கதாகும்.

**அல்லையுற்று இரத்தினபுரி அண்டி அப்பாலே நிவிற்றிக் கொல்லை**
**அடைந்த அலுப்புக் கொண்டதற்கு – கல்லடியான்**
**வண்டாரும் மாலை அணி மற்புயற் சுப்பையுடன்**
**கொண்டாடினான் ஒடியற் கூழ்**

ஈழத்தைச் சேர்ந்த ஆசுகவியான கல்லடி வேலுப்பிள்ளை என்பவர் கூழையும் ,தனக்குக் கூழ்குடிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தையும் சுவையாக இப்பாடலின் வாயிலாக வெளிப்படுத்தி நிற்கிறார்.

பனங்கிளங்கானது பல மருத்துவ குணங்களைக் கொண்டதாகவே இருக்கிறது என்பதை மனமிருத் தல் அவசியமாகும். பச்சைக்கிழங்கினைச் சுத்-தம் செய்தெடுத்து பின்னர் அதனை உரலிலிட்டு இடித்து எடுக்க வேண்டும். இடித்து எடுத்ததை நீரில் கரைத்து பின்னர் அந்தக்கலவையினை வடித்து எடுக்க வேண்டும். வடித்தெடுத்ததை வெய்யிலில் உலரவைக்க வேண்டும். உலர்ந்த பின்னர் வருகின்ற அந்தமாவனது பாலூ ட்டும் தாய்மார்களுக்கு உகந்ததாக இருக்கிறது என்பது மனமிருத்த வேண்டிய கருத்தாகும். ஒடியற் கூழானது உணவாக இருக்கிறது. நல்ல சுவையினை-யும் கொடுக்கிறது. அதற்கு அப்பாலும் உடலின் ஆரோக்கி யத்துக்கும் கைகொடுக்கும் நிலையிலும் இருக்கி றது என்பதுதான் மிகவும் முக்கியமாகும். ஒடியற் கூழி னைக் குடிப்பதால் பல நன்மை

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# கற்பகதரு என்னும் அற்புதம்......

(2ஆம் பக்கத் தொடர்ச்சி..)

களையும் தருகிறது என்பதைக் கருத்திருத்தல் வேண்டும். வாயுத் தொல் லைகள் அனைவரையும் வாட்டி வதைக்கும் ஒன்றாகும்.வாயுவினால் உடம்பில் உளைவுகள் ஏற்படும் நிலை உருவாகிறது. வாயு அல்லாத நிலையில் வேறு காரணத்தாலும் உடலில் உளைவு ஏற்படவும் கூடும். கை கால் களில் பிடிப்பு ஏற்படும். மலமானது வெளியேறாமல் பெரும் வேதனையும் ஏற்படும். இப்படியான வேளை களில் கைகொடுத்து உதவிடும் கைகண்ட மருந்தாக ஒடியற்கூழ் விளங்குகிறது என்பது மிகவும் முக்கிய மான செய்தியாகும். இதன் காரணமாக " தாலமூல கீரசூரண தைலம் " என்று ஒடியற்கூழைச் சொல்லுவதும் நடைமுறையில் இருக்கிறது என்றும் அறிந்திட முடிகிறது. அந்த அளவுக்கு ஒடியற்கூழ் மருந்தாகவும் அமைகிறது என்பதுதான் முக்கியமாகும்.

கொழுக்கியெனும் பூச்சிகளைக் கொலு மொடியற்
கூழினையுண் புழுக் கொடியல் கொறி நீமாலை
வழுக்கிவிழுங் காலைமல வாசலூடே
வைத்தியனுந் தேவையிலை வயிற்றின் கண்ணே
அழுக்கணுவுங் குடலகத்தி லணுகிபாது
ஆகாரம் பசிகடுப்ப வதிகஞ் செல்லும்
கொழுப் பொடியற் புட்டினையுண் கூடவேறும்
குறுமுனிவர் கூற்றிவைகைக் கொள்ளுவீரே
கிண்டிப் பிடுங்கிக் கிழித்து உலர்த்தி
வாலொடுத்துததன் பின்
துண்பப் படுத்தி இடித்து அரித்து
நற் கூழுமிட்டே
வண்டுக்கடி கிழங்காகிபாப்
பூரானதையு மிட்ட
சண்டக் குழம்புக்கு எதிர்வருமோ
சின்னப் பொடியனுமே

என்று ஒடியற் கூழினைப்பற்றி பனை இராசன் நாடகம் பார்க்கும் பார்வை யும் ஒடியற்கூழின் மகத்துவத்தை வெளிக்காட்டி நிற்கிறதல்லவா!

கூழ் குடித்து மகிழ்ந்தோம். அதுவும் ஒன்றாகவே கூடியிருந்து நண்பர்கள் கூட்டத்துடனும் கூழ் குடித்தோம். உறவுகளுடன் இணைந்தும் கூழினைக் குடித்து மகிழ்ந்தோம். ஒடியல் மாவில் கூழ் மட்டுமல்ல பிட்டும் அவை த்துச் சுவைத்துச் சுவைத்து உண்டு மகிழலாம்.ஒடியல் மாவிலே பிட்டு அவித்தால் நல்ல வாசனை அங்கே வரும். அதுவும் பனை ஓலையினால் செய்யப்பட்ட நீத்துப்பெட்டியில் அவிக்கும் பொழுதுதான் அந்தச் சுக மான சுவையான வாசனை வந்து நிற்கும்.அந்த வாசனையினை நுகர்ந்தாலே ஒரு தனி இன்ப மாகத்தானி ருக்கும். அனுபவித்தர்களுக்கு மட்டுமே அது தெரி யவரும். கீரை போட்டு பிட்டு அவிக்கும் முறையும் இருக் கிறது.

கீரை சேர்க்கும் பொழுது பிட்டின் சுவை மேலும் அதிகரிக்கும் என்பதை அதனைச் சாப்பிட்டவர்களு க்கே தெரியும்.குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் நிலையில் தாய்மார்களுக்கு பால் சுரப்பதில் சிக்கல் ஏற்படும் நிலையினைக் காணக்கூடியதாக இருக்கிறது. அப்படியான நிலையில் ஒடியல் பிட்டினைச் சாப் பிட்டால் தாய்ப்பால் நன்றாகவே சுரக்கும் நிலை ஏற்படுகிறது என்பது மிகவும் முக்கியமாகும். ஒடியல்மா பிட்டு ஏழைகளின் உணவாக இருக்கிறது என்பதும் குறிப்பிடப் படவேண்டிய ஒரு முக்கிய செய் தியாகும். ஏழைகளின் உணவாக மட்டுமன்றி பசியினைப் போக்கும் உணவாயும், வலிமைதரும் உணவாயும் அமைகிறது என்பதையும் கருத்திருத்தல் வேண்டும். தேங்காய்ப்பாலினைச் சேர்த்தும் சிலர் ஒடியற் பிட் டினை அவிக்கிறார்கள். நெய்யினைக் கலந்தும் அவிப்பதும் நடைமுறையில் காணப்படுகிறது. இதனைவிட இன்னுமொரு முறையும் ஒடியற் பிட்டு அவிப்பதில் கையாளப்படுகிறது. தேங்காய்ப்பூ, மிள கு, உப்பு, மிள காய், சீரகம், அரிசி மா, இவை அத்தனையையும் ஒடியல் மாவுடன் கலந்து அவிப்பதுதான் அந்த முறையா கும். ஒடியல் பிட்டினை இனிப்புடன் சாப்பிட்டது இன்னும் என் நினைவில் இருக்கிறது. பனங்கட்டியுடன் ஒடியற் பிட்டினைச் சுடச்சுடச் சாப்பிடுவதே ஒரு தனிச்சுவைதான். விரும்பினால் நீங்களும் ஒடியல் மாவினை வாங்கி அவித்து பனங்கட்டியுடன் சாப்பிட்டுத்தான் பாருங்களேன்! எண்பத்து ஒரு விகித அளவில் மாச்சத்தினையும், நான்கு புள்ளி எட்டு விகித அளவில் புரத சத்தினையும், இரண்டு விகிதம் அளவில் உலோகப் பொருள் சத்தினையும், சைபர் புள்ளி மூன்று விகிதம் அளவில் கொழு ப்புச்சத்தும் ஒடியல் உணவில் இருக்கின்றது என்று அறியக்கூடியதாக இருக்கிறது.

ஒடித்துய ரொடியலென்ன உரலிட்டு லக்கை கொண்டு
இடித்துநற் சுளகாற் றெள்ளி எஞ்சிய மாவைப் பிட்டாய்
அடுப்பேற்றி நீற்றுப் பெட்டியாலதை யிறக்கி வெண் ணெய்
இடுத்து நீருண்பீரானா லில்லை யினிப்பின் ரோகம்
சீவசத்தில் உணவுகளின் சிரசாய் நின்று
தீங்குதரு சலரோகம் பாண்டு குன்மம்
ஆயகெட்ட நோய்களென்றும் அணுகிபாது
ஆதரிக்கு மரிய பெரும் ஆற்றலுற்றுத்
தாயகத்தி லரியபெரும் உணவாய்த் தோன்றித்
தஞ்சமிலா ஏழைமக்கள் தமையுந் தேற்றி
மாயவித்தை போன்றேனென் மாவின் சத்தை
மாநிலத்தில் உணராதார் மாக்கள் தானே

என்று இப்பாடல்களும் ஒடியல் மாவின் மகத்துவத்துக்குச் சான்று பகருவதாய் வந்தமைகிறது என்பதையும் கருத்திருத்தல் அவசியமாகும்.

பனங்கிழங்கினை உணவாக எடுப்பது மட்டுமேதான் எங்களுக்குத் தெரியும். ஆனால் அதில் அடங்கியிருக்கும் மருத்துவ குணங்களை அறிந்திட்டால் பனங்கிழங்கினைப் பொக்கிஷமாகவே நாங்களனைவருமே போற்றி நிற்போம்.பனங்கிழங்கினைப் பற்றி பழைய வைத்திய நூல்கள் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன. அந்த வகையில் சித்தவைத்தியத்தில் முன்னணி வகித்தவர்களான போகர், புலிப்பாணியார், கொங்கணர் ஆகியோர் கருத்துக்கள் மனமிருத்த வேண்டிய கருத்துக்களாகவே இருக்கின்றன. பனங்கிழங்கில் இரசாய னப் பொருட்கள் பல இருக்கின்றன என்பது மிகவும் முக்கியமான செய்தியாகும்.சிறு பிள்ளைகளுக்கு குட லில் நாடாப்புழு, பாண்டுக்கிருமி, கீரைப்பூச்சி, தானப்புழு , என்பனவற்றால் தாக்கம் ஏற்பட வாய்ப்பிருக் கிறது. அப்படி ஏற்படும் பொழுது அதனை நீக்கிட கைகொடுத்திடும் மருத்துவம் தன்மையினைனைப் பனங் கிழங்கில் இருக்கும் இரசாயானப் பொருட்கள் கொண்டிருக்கின்றன என்பதுதான் இங்கு கருத்திருத்த வேண்டியதாகும். பனங்கிழங்கினைச் சாப்பிடுவதால் இப்படியான பூச்சிகள் அனைத்துமே உட லைவிட்டு வெளியேறும் நிலை ஏற்படுகிறது என்பதுதான் மிகவும் முக்கிய செய்தியாகும். சிறிய பிள்ளைகளுக்கு மருந் தாக உதவுவதோடு நின்று விடாது பெரியவர்களுக்கும் மருந்தாக உதவி நிற்கிறது. மேககரணம், வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, சருமத்தில் ஏற்படுகின்ற நிறமாற்ற ம், ஆகிய நோய்களை அகற்றிடும் வகையிலும் பனங்கிழங்கு இருக்கிறது என்பதையும் கருத்திருத்தல் அவசியமேயாகும்.பனங்கிழங்கானது அத்துடன் அமை யாது மேலும் பல நிலைகளிலும் மருந்தாகி நிற்கிறது. அந்திரச்சூடு தணி கிறது.

பித்தம் அகல்கிறது. குளிர்ச்சியையும் , வனைப்பையும் தந்தும் நிற்கி றது அதுமட்டுமின்றி அதி மூத்திரம், அரிப்பு, ஆசனக் கடுப்பு, ஆசன வெடி ப்பு, இரத்தப்பித்தம், இரத்தமூலம், உள்மூலம், கரப்பான், கருஞ்சொறி, காளாஞ்சுப் படை, கிரந்தி, கிரந்திப்புண், குடற்புரட்டல், குறிகரணம், சிறுநீர் எரிச்சல், சீழ் மூலம், சூதக வயிற்றுவலி சொட்டு மூத்திரம், தண்டு வீக்கம், சொறி, படர்தாமரை, படை, பவுத்திரம், பித்தமயக்கம், மாதவிடாய் சிக்கல், யோனிநோய்கள், வெட்டைநோய், ஆகியவற்றையும் குணமாக்கும் மருந்தாகவும் அமைந்திருக் கிறது என்பது நோக்கத்ததாகும்.

நேர்ந்தவுட் சூடும் நீஅர்ந்தபன் மேகமுடன்
சேர்ந்தபல வீனம் சுகமாகும் – ஓர்ந்து
பலமறிந்து பேசும் பனங்கிழங்கிற் குள்ள
நலமிதுவாம் நாட்டிற் பகர்
பனங்கிழங் காலத்தி வெப்பம் பன் மேகமும்போ
மினுங் குளிர்ச்சி யோபழகு மெய்துங்தின நன்மையும்
புண்ணுங் கரப்பானும் பூரிக்கு மெய்யுலா
நுண்ணும் ஒடி கிழங்கினால்





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# யாழ்.வடமராட்சி அல்வாயில் கில்மிசாவுக்கு மதிப்பளிப்பு











யாழ்ப்பாணம் - வடமராட்சி அல்வாயில் சீ தமிழ் சரிகமப லிட்டில் சம்பியன் கில்மிஷாவை கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வட அல்வை இளங்கோ சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் ஞாயிறு மதியம் 3 மணிக்கு வட அல்வை இளங்கோ சனசமூக நிலைய மைதானத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது அல்வாய் வடக்கு நாவலடி சந்தியில் இருந்து

கில்மிஷா வாகனத்தில் நிகழ்வு மைதானம் வரை அழைத்துச் செல்லப்பட்டார்.

மன்னார் மாவட்ட செயலாளர் கனகேஸ்வரனால் கில்மிஷாவுக்கு 'கான வாணி' என்ற பட்டமும் வழங்கப்பட்டு கௌரவமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பெருமளவான பொதுமக்கள் கலந்து கொண்டு கில்மிஷாவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## தகவல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் நாடாளுமன்றம் ஜனவரி மாதம் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை நிறைவேற்றியபோது, கருத்துச் சுதந்திரம், புத்தாக்கம் மற்றும் தனியுரிமை ஆகியவற்றில் அது ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான விளைவுகள் குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

கட்டுப்பாடற்ற கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான வாதங்கள் முன்வைக்கப்படுவது ஒரு பொதுவான விடயமாகும். அரசுகளை தர்மசங்கடத்தில் ஆழ்த்துவதையும் பொதுமக்களின் நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ள ஊடகங்கள் பக்கச்சார்பானவை என விமர்சகர்கள் கூறுகின்றனர்.

கட்டுப்பாடுகளற்ற நிலையில் கருத்துச் சுதந்திரமானது தவறான தகவல்கள் பரவுவதை ஊக்குவிக்கலாமென ஏனையவர்கள் கவலைப்படுகிறார்கள். கட்டுப்பாடுகளற்ற பத்திரிகைகள் பதற்றத்தைத் தூண்டி பாதுகாப்பு நிலைமைகளை பாதிப்பிற்குட்படுத்தலாமென வேறு சிலர் வாதிடுகின்றனர்.

ஊழல், வன்முறை மற்றும் அரசியல் முரண்பாடுகள் தொடர்பான தொடர்ச்சியான அறிக்கைகள் ஒரு நாட்டின் நற்பெயரைக் கெடுத்து, முதலீட்டு முயற்சிகளை பின்னடைவிற்குட்படுத்தி நாட்டின் அபிவிருத்தியைத் தடைசெய்யலாமென்ற கரிசனைகளும் காணப்படுகின்றன.

இருப்பினும் ஊடகங்களின் பக்கச்சார்பானது, தலைவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தும் பாதுகாவலர்களாக செயற்பட்டு, பொதுமக்களின் நலன்களை நோக்கி சாய்தல் வேண்டும். இலங்கைக்கும், அமெரிக்காவிற்கும், முழு உலகிற்கும் இக்கொள்கை பொருத்தமானதாகும்.

பெரும்பாலும் 'போலிச் செய்திகள்' அல்லது 'பக்கச்சார்பான ஊடகவியல்' என முத்திரை குத்தப்படும் எதிர்மறையான பத்திரிகைகளால் ஏற்படும் சவாலானது ஒரு புதிய விடயமல்ல.

பலதலைமுறைகளாக, அரசாங்கங்களும் ஊடகங்களும் ஒரு சிக்கலான, சில சமயங்களில் விரோதமான உறவுகளினூடே பயணித்துள்ளன.

இந்த இயக்கவியலானது எந்தவொரு நாட்டிற்கும் தனித்துவமான ஒரு விடயமல்ல உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவில், இரு பிரதான அரசியல் கட்சிகளையும் சேர்ந்த ஜனாதிபதிகள் பத்திரிகையாளர்களுடன் முரண்படுவதில் தங்கள் பங்கை அனுபவித்திருக்கிறார்கள். ஜனநாயக சமூகங்களின் ஒருதனிச்சிறப்பான இப்பதற்றமானது வெளிப்படைத்தன்மையை பேணிவளர்ப்பதிலும் செயல்வினைவுள்ள நிர்வாகத்தை ஊக்குவிப்பதிலும் ஒரு இன்றியமையாத பங்கினை வகிக்கிறது.

விசேடமாக தலைவர்கள் அவர்களது நடவடிக்கைகள் தவறாக சித்தரிக்கப்படுவதாக உணரும்போது, தவறான மற்றும் பக்கச்சார்பான அறிக்கையிடல் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு வழிவகுத்து அரசியல்வாதிகளும் பத்திரிகையாளர்களும் சூடான கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபடுவதானது ஒரு வழக்கமான காட்சியாகும்.

ஆளும் தரப்புகளின் சாதனைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதுடன், கொள்கைகள் அல்லது நிகழ்ச்சித்திட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதும், உண்மைகளை உள்ளபடியே மக்களுக்கு வழங்குவதும் பத்திரிகைகளின் கடமையாகும்.

பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவது மட்டுமன்றி இந்த வெளிப்படைத்தன்மையானது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் முன்னேற்றத்தையும் ஊக்குவிப்பதால் தேசத்தையும் பலப்படுத்துகிறது.

அத்துடன் குரல்களை அடக்குவதானது விடயங்களை மேலும் சிக்கலாக்குகிறது. சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பதிலாக அவற்றை மறைக்க முயற்சிப்பது உடைந்த ஒரு கருவியை சரிசெய்வதற்குப் பதிலாக அதை மறைப்பதற்குச் சமமாகும். உண்மையான முன்னேற்றம் என்பது ஒன்றிணைந்த உரையாடல்களிலிருந்து வருகிறது, அது பொது உரையாடலின் குழப்பத்தைத் தழுவுவதாக இருந்தபோதும் கூட. சு 'நல்லயோசனைகள் இறப்பதற்காகச் செல்லுமிடம்' என அழைக்கப்படும்

படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் அச்சமின்றி புதிய விடயங்களை முயன்று பார்ப்பதற்கும் புத்தாக்கங்களை உருவாக்குவதற்குமான சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய தீவிரமான தேவையினை அங்கிருந்த இளம், புத்தாக்க சிந்தனையுடையவர்களுடனான எனது தொடர்பாடல் அடிக்கோடிட்டுக் காட்டியது. ஆம், சில நல்ல சிந்தனைகள் இறப்பதுண்டு, எனினும் படைப்பாளிகள் சிந்திப்பதற்கும் முயற்சி செய்வதற்கும் மற்றும் தோல்வியடைவதற்கும் கூட அவர்களுக்குத் தேவையான சுதந்திரம் காணப்படுதல் அவசியமாகும். அவ்வாறுதான் நாம் முன்னேற்றமடைகிறோம்.

கருத்துச் சுதந்திரத்தின் மீதான மிகவும் பரந்த மற்றும் தெளிவற்ற கட்டுப்பாடுகள் படைப்பாற்றலை மூச்சுத்திணறலுக்குட்படுத்தி, புத்தாக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றைத் தூண்டக்கூடிய சாத்தியமான முன்னேற்றங்களை சமுதாயத்திடமிருந்து பறித்துவிடும்.

தணிக்கை செய்யப்படும் ஒரு நிலையானது புத்தாக்கத்தினைத் தடுப்பது மட்டுமன்றி, கடுமையான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நவீன தீர்வுகளைக் கையாளும் சமூகத்தின் உற்சாகத்தினையும் அது தளர்வடையச் செய்கிறது.

ஊடகவியலை நோக்கி உங்களை ஈர்த்த அந்த ஆரம்ப தீப்பொறியைப் பற்றி சிந்திக்குமாறு நான் உங்களிடம் கேட்கிறேன். அது செல்வச் செழிப்பு அல்லது புகழின் கவர்ச்சியாக இருந்திருக்கும் என்பது சந்தேகமே அது அனேகமாக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் இலங்கையின் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்வதற்குமான ஒரு உத்வேகமாகவே அமைந்திருக்கும். இவை உங்களை இயக்கும் சக்திகளாக இருக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், விடாமுயற்சியுடன் செயற்படுமாறு நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களது அர்ப்பணிப்பு, உங்களது உரிமைகள் மற்றும் உங்களது சுதந்திரம் என்பன இத்தேசத்தின் தற்போதைய வளர்ச்சி மற்றும் செழிப்பிற்கு மிகவும் முக்கியமானதாகும்.

இதைக்கருத்திற்கொள்ளுங்கள்: உங்களில், நவீனகால லிங்கன் ஸ்டெஃபென்ஸாக உருவெடுக்கப்போவது யார்? இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்லும் கதைகளை எழுதப்போவது யார்? அந்த நபர் இன்று இப்போது எம்மிடையே இருக்கலாம்.

பேச்சுச் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் மற்றும் கட்டுப்படுத்தப்படாத கருத்துப் பரிமாற்றம் ஆகிய விடயங்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு அவர் தயாராக இருக்கலாம். சுதந்திரமான பத்திரிகை என்பது இலங்கையின் ஒரு எதிரி அல்ல என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும். ஒரு மீண்டெழும் தன்மையுள்ள மற்றும் செழிப்பான சமுதாயத்திற்கு வழி வகுக்கும் அது இலங்கையின் மிகப்பெரிய நண்பர்களுள் ஒன்றாகும் என்று மேலும் தெரிவித்தார்.

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்காம் கட்டம் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து நேற்று நிகழ்நிலை மூலம் தொடக்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான முதல் கட்டமாக 1300 வீடுகளுக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது. இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசு தந்த நன்கொடைகளைப் பயன்படுத்தி இந்தத் திட்டத்தை முன்னெடுக்கிறோம். மலையக தமிழ் மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இந்திய அரசு இந்த வீட்டுத்திட்டத்தை வழங்கியது. அதற்காக இந்திய அரசுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றிய மலையக தமிழ் மக்கள் தங்களுக்கென காணியும் வீடும் இல்லாமை பெரும் குறைபாடாக இருந்தது. உண்மையில், குறிப்பிட்ட காலம் அவர்களுக்கு வாக்குரிமை கூட இருக்கவில்லை. எனினும், அந்த அரசியல் உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. எனினும், பொருளாதார, சமூக உரிமைகளை வழங்க வேண்டியிருக்கிறது. இதில் ஒரு பகுதியை நாம் இன்று முன்னெடுத்துள்ளோம்.

வீடுகளை அமைப்பதற்கு காணிகளைப் பெறவேண்டியுள்ளது. இதற்காக தோட்டக் கம்பனிகளுடன் பேச்சு நடத்த வேண்டியுள்ளது. சில நேரம் அரச காணிகளை வழங்க நேரிடும். இதற்கமைய வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். அடுத்து மலையக தமிழ் மக்களின் கல்வி நிலைமை ஏனைய பிரதேசங்களை பின்தங்கி இருக்கிறது. தமிழ் பிரதேச பாடசாலைகளை, ஏனைய பாடசாலைகளின் நிலைமைக்கு நிராக மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தை அனைத்துப் பிரதேச செயலகங்கள் ஊடாகவும் முன்னெடுக்கத் திட்டமிட்டு வருகிறோம். ஏனைய மக்களைப் போல இந்த மக்களுக்கும் அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மலையகத்தில் வாழும் அனைவரும் தோட்டத்தொழிலாளர்களல்லர். அவர்கள் கல்வி பெறுவதற்கான உரிமையை உறுதி செய்வதோடு தொழிற்பயிற்சி பெறுவதற்கான வசதிகளை இளைஞர் யுவதிகளுக்கு வழங்க வேண்டும். தோட்டத் தொழிலாளர்களாக அவர்களை தொடர்ந்து வைத்திருக்க முடியாது. தோட்ட ஒப்பந்தங்களுக்கு அமைய காணித் துண்டொன்றை வழங்கி சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிகராக அந்த மக்களை மேம்படுத்துவது குறித்து ஆராயப்படுகிறது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் இது தொடர்பில் அதிக ஆர்வத்துடன் பணியாற்றி வருகிறார். அதேபோல், இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் உட்பட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இந்த அனைவரையும் இணைந்துக் கொண்டு, கட்சி பேதமின்றி, இதுகுறித்த யோசனைகளை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தற்போதிருக்கும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பேச்சு முன்னெடுத்துள்ளோம். அதன்பின்னர் மலையக தமிழ் மக்களதும், முஸ்லிம் மக்களதும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து, இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, முன்நோக்கிப் பயணிக்க வேண்டும். இந்தப் பயணத்திற்கு நாம் தயாராக வேண்டும். நீண்ட காலமாக நாம் துன்பங்களை எதிர்கொண்டோம். எனினும், இன்று வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு வருகிறோம். இந்த வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு, பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

உணவு இல்லாத, எரிபொருள் இல்லாத நாட்டையே நான் அன்று பொறுப்பேற்றுக்கொண்டேன். இன்று உணவு, எரிபொருள் ஆகியன தடையின்றி கிடைக்கின்றன. பொருளாதாரத்தை மேம்படுத்தி, முன்நோக்கிச் செல்லும்போதும் பிரச்சினைகள் எழும். வரி அதிகரிக்கப்பட்டதுடன் தொடர்புள்ள பிரச்சினை இருக்கிறது. எனினும், இந்தப் பிரச்சினைகள் நீண்ட காலம் நீடிக்காது. சிறிது காலம் செல்லும்போது அந்த வரிச் சுமை குறையும்.

நாடு நெருக்கடியை எதிர்கொண்ட போது இந்தியாவினால் வழங்கப்பட்ட உதவிகளுடன் முன்நோக்கிப் பயணிக்க முடிந்தது. இந்த உதவிகள் கிடைத்திருக்காவிட்டால், எம்மால் முன்நோக்கிப் பயணித்திருக்க முடியாது. எனவே, நாம் இந்தியாவுடனான பொருளாதார உறவுகளை மேலும் வலுத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறோம். அனைத்து நாடுகளும் தமது எல்லைகளுக்குள் பொருளாதாரத்தையும், சமூகத்தையும் மேம்படுத்திக் கொள்ளவே முயற்சித்தன.

விசேடமாக இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், நாமும் இதிலிருந்து பயன்பெற வேண்டும். இந்தியப் பிரதமர் மோடி அவர்களை சந்தித்தபோது, இதுகுறித்து இணக்கப்பாட்டிற்கு வந்து, இதனை மையப்படுத்தி பணியாற்றி வருகிறோம். இதற்கமைய இந்த வீட்டுத் திட்டத்திற்கு உதவிகளை வழங்கிய இந்திய அரசாங்கத்திற்கு மீண்டும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைமையை இரத்து செய்யும் இறுதி முயற்சியை ஆட்சியாளர்கள் கையில் எடுத்துள்ளனர்.

தேர்தலை நடத்தாமல் மேலும் ஒரு ஆண்டு காலம் பதவியில் இருக்க ஆளும் தரப்பு முயற்சிக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த ஆளும்தரப்பின் சாபத்தை முடிவுக்கு கொண்டு வருவதா அல்லது காலத்தை நீடித்து சாபத்தை தொடர்ந்து அனுபவிப்பதா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலை நடத்தும் திகதி தொடர்பில் ஜனாதிபதி தீர்மானிக்க முடியாது. தேசிய தேர்தல்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் வெளியிடும் அறிக்கைகள் வெறும் கடதாசி மாத்திரமே தவிர அதற்கு எவ்வித செல்லுப்படி தன்மையும் கிடையாது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. ஜனாதிபதி தேர்தல் விவகாரம் அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய தேர்தல்கள் ஆணைக்குழு செயற்பட வேண்டும்.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் வாரம் தேர்தல்கள் அலுவலகத்தில் இடம்பெவுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தவுள்ளோம் என்றார்.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லங்காலோகய என்ற அமைப்பு மாகாணசபை முறையை நீக்கிவிட்டு மாவட்ட சபைகளை ஏற்படுத்தும் யோசனையை முன்வைத்துள்ளது.

பிரதேசசபைகளை வலுப்படுத்தும் யோசனையையும் இந்த அமைப்பு முன்வைத்துள்ளது.

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களிடமும் மாகாண சபைமுறையை நீக்கவேண்டும் என்ற யோசனையை முன்வைக்கவுள்ளோம் என தெரிவித்துள்ள பசன்ட யாப்பா அபயவர்த்தன மாவட்ட சபைகளை உருவாக்குங்கள் பிரதேசசபைகளை வலுப்படுத்துங்கள் என கோரிக்கை விடுக்க இருக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட அமைச்சர்களை நியமிக்கவேண்டும் இதன் காரணமாக மாவட்டங்களின் அபிவிருத்தியை துரிதப்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைகள் வெள்ளை யானைகள் அவற்றினால் 1988 முதல் 7000 பில்லியனை வீணடித்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைகளை தொடர வேண்டிய தேவையில்லை அவசியமில்லை வடக்கில் எவரும் மாகாணசபைகளுக்காக குரல் கொடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாணசபை தேர்தலை நடத்துமாறு இந்தியா கூட அழுத்தம் கொடுக்கவில்லை இவ்வாறான சூழ்நிலையில் மாகாணசபைகளை தொடரவேண்டிய அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கட்சியைவிட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனு மீதான விசாரணைகளின் பின்னர் நீதிமன்ற வளாகத்தில் வைத்து நேற்றையதினம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனரல் தயா ரத்நாயக்கவை கட்சியில் இணைக்கும் போது கட்சியின் இரண்டாவது பதவி நிலையில் உள்ள எனக்கு அறிவிக்கப்படவில்லை. அவர் இணைக்கப்பட்டதன் பின்னர் எனது நிலைப்பாட்டை நான் கட்சியின் தலைவர் மற்றும், பொதுச்செயலாளர் ஆகியோரிடத்தில் வெளிப்படுத்தினேன்.

ஆனால், அவர்கள் செவிசாய்த்ததாக இல்லை. இதனையடுத்து என்னை ஊடகங்கள் தொடர்புகொண்டு குறித்த விடயம் சம்பந்தமான கருத்துக்களைக் கோரின. அதனடிப்படையில் நான் எனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினேன்.

அதேபோன்று தான் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையின் போது நாடாளுமன்றத்தில் அமர்ந்திருந்தமையை ஆளும் தரப்பிற்கு சார்பாக செயற்படுவதாக கொள்ள முடியாது. உரையில் எந்த விடயங்கள் கூறப்படுகின்றன என்பதை அவதானித்ததன் பின்னர்தான் பதிலளிப்புக்களை விவாதத்தின் போது செய்ய முடியும்.

எனினும், குறித்த செயற்பாடுகளை மையப்படுத்தி எமது கட்சியில் உள்ளவர்களே கடுமையான முறையில் என்மீது சேற்றை வாரியிறைத்தார்கள். அனைத்தையும் பொறுத்துக் கொண்டேன். எந்தப்பிழைகளும் செய்யாது என்னை கட்சியிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதனால் தான் நான் நீதிமன்றத்தை நாடும் நிலைமை ஏற்பட்டது. நீதிமன்றம் எனக்கு சாதகமாக இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது. அதேநேரம், என்னைப் பொறுத்தவரையில் எனக்கு வாக்களித்த ஒருஇலட்சத்து இருபதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் உள்ளனர். அவர்களுக்கும், கட்சிக்கும் நேர்மறையாக செயற்படுவது எனது நோக்கமல்ல. நான் கட்சியைவிட்டு வேறுகட்சிக்கோ அல்லது சுயேட்சைக்குழுவிடமே சென்று இணைந்து கொள்வதாக் தீஜூமானிக்கவும் இல்லை. நான் உண்மையாக நேர்மையாக இருக்கவே விரும்புகின்றேன் என்றார்.

## 10 வயது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமியின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் 48 மணி நேர பொலிஸ் காவல் முடிந்து பெப்ரவரி 29 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## இந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும். இதற்காக 12,000 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது.

அத்துடன் சீன அரசின் அனுசரணையின் கீழ் பாடசாலை மாணவர்களின் சீருடைக்குத் தேவையான துணியில் 80மூ, அதாவது 05 பில்லியன் ரூபா பெறுமதியான சீருடைத்துணிகள் எமக்கு கிடைத்துள்ளன. அவை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான பாடசாலை கால அட்டவணை

தொடர்ச்சி 10ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகவியலாளர் அஸ்ஹருக்கு விசேட து ஆப் பிரார்த்தனை



(அஸ்லம் எஸ்.மௌலானா)

திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற சிரேஷ்ட ஊடகவியலாளரும் கவிஞரும் இளைஞர் சேவைகள் மன்ற சிரேஷ்ட உத்தியோகத்தருமான ஏ.அஸ்ஹர் பூரண சுகம்பெற வேண்டி அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரம் ஏற்பாடு செய்திருந்த விசேட துஆப் பிரார்த்தனை ஞாயிற்றுக்கிழமை மாலை சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவைக் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் எம்.எஸ்.எம். ஹனிபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம் எம்.ஐ.ஆதம்பாவா மௌலவி துஆப் பிரார்த்தனையை நடத்தி வைத்தார்.

இதில் ஊடகவியலாளர் ஏ.அஸ்ஹரின் குடும்பம் சார்பில் அவரது உறவினரான முன்னாள் பிரதேச செயலாளர் எம்.எம். தௌபீக் கலந்து கொண்டு குறித்த ஏற்பாட்டுக்காக நன்றி தெரிவித்து ஏற்புரை நிகழ்த்தினார்.

அமைப்பின் செயலாளர் ஏ.எல்.எம். சினாஸ் நன்றியுரை நிகழ்த்தினார். சிரேஷ்ட உறுப்பினர் யூ.கே. காலித்தீன், நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்திருந்தார். (05)

# அட்டாளைச்சேனை இக்றஃ வித்தியாலய புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு

(கே எ ஹமீட்)

2023 ஆம் ஆண்டு இடம்பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிப்பதுடன், இந்த மாணவர்கள் சித்தியடைவதற்கு வழிப்படுத்திய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் திருமதி ஹாபிலா முகம்மட் சிறாஜ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக்க அபேவிக்ரம கலந்துகொண்டதுடன் விசேட அதிதியாக கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை கலந்து சிறப்பித்ததுடன், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் ஷாபிர் , மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ஏ.சி.றியாஸ், முன்னாள் பிரதேச உறுப்பினர் ஏ.எஸ்.எம்.உவைஸ் ஆகியோருடன் பிரமுகர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். (05)

# மட்டு. இராமகிருஷ்ண மிஷனினால் கலாநிதி ஜெயசிறிலுக்கு கௌரவம்



(காரைதீவு சகா)

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ்ஜிடம் ஆசீர்வாதம் பெற்ற கலாநிதி ஜெயசிறிலுக்கு திடீரென அதிர்ச்சிக் கௌரவம் அளிக்கப்பட்டது.

இந் நிகழ்வு கடந்த வெள்ளியன்று இடம் பெற்றது.

அண்மையில் சமூக சேவைக்காக கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்ற காரைதீவு முன்னாள் தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் சுவாமியின் ஆசீர்வாதம் பெறுவதற்காக

காரைதீவிலிருந்து கல்லடி இராமகிருஷ்ண மிஷனுக்கு சென்றார்.

அங்கு சுவாமி நீலமாதவானந்தா ஜீ யின் காலில் வீழ்ந்து பாத நமஸ்காரம் செய்து ஆசிர்வாதம் பெற்றார். கூடவே சமூக செயற்பாட்டாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜாவும் சமுகமளித்திருந்தார்.

ஆசிர்வாதம் வழங்கிய சுவாமிகள் திடீரென நேரடியாக இல்ல மாணவர்கள் மத்தியில் ஒரு கௌரவிப்பு நிகழ்வுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்.

எதிர்பாராத விதமாக அங்கு சுவாமிகள் அவருக்கு பொன்னாடை போர்த்தி தெய்வத்திருமூவரடங்கிய திருவுருவப்படம் வழங்கி நினைவு பதக்கத்தையும் அணிவித்து கௌரவித்தார். அங்கு உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ்ஜ/ம் சமுகமளித்திருந்தார். அங்கு அவரது சேவைகள் பற்றி உரையாற்றினார்கள்.

மேலும் சமூக சேவைகள் மேற்கொள்ள பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் அருள் புரிவார் என ஆசி வழங்கினார்.

இல்ல மாணவர்களும் வாழ்த்துத் தெரிவித்தனர். (05)

# 2000 ரூபாவால் நெல் விலை திடீரென வீழ்ச்சி அறுவடைக் கூலியோ கட்டுமப்டின்றி எகிறல்!

## விவசாயிகள் திண்டாட்டம்

(சினாஃபர் நவ்பர்)

மூதூர் கமநல சேவையாளர் பிரிவில் செய்கைபண்ணப்பட்ட பெரும்போக நெல் அறுவடை பரவலாக நடைபெற்றுவருகின்றது . கீரிச்சம்பா நெல் ஒரு மூடை 9500 ரூபாவுக்கு வெளியூர் தனியார் நெல் வியாபாரிகள் கொள்வனவு செய்துவந்த நிலையில் தற்போது திடீரென 7500 ரூபாவுக்கு நெல்லொ கொள்வனவு செய்கிறார்கள். திடீரென ஒரு மூடை நெல் 2000 ரூபாவால் வீழ்ச்சியடைந்துள்ளதால் இங்குள்ள விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளதோடு பாதிக்கப்படுகிறார்கள்.

அதே நேரம் நாடு ஒரு மூடை 5500 ரூபாவாக விலைபோகிறது.

அறுவடை கூலி ஏக்கருக்கு 14000 ரூபாவாவிலிருந்து 16000 ரூபவால் அதிகரித்திருப்பதாக விவசாயிகள் கூறுகிறார்கள்.

இதற்கான காரணம் அறுவடை இயந்திரத்திற்கான தட்டுப்பாடும் ஒரே நேரத்தில் விளைந்தமையுமே காரணம் ஏக்கரொன்றுக்கு 20முதல் 25 வரையான நெல் மூடைகள் அறுவடை கிடைப்பதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

நெல் விலை பாரிய வீழ்ச்சியால் நெல்லை உரிய விலைக்கு விற்பனை செய்யமுடியாது இங்குள்ள விவசாயிகள் திண்டாடுகிறார்கள்.

வெளியிடங்களிலிருந்து வரும் இயந்திரம் மூலம் அறுவடை நடைபெறுவதோடு வெளியிடங்களிலிருந்துவரும் அரிசி மில் காரர்கள் நெல்லைக் கொள்வனவு செய்கிறார்கள் நெல்லுக்கு உரிய விலை போகாததால் விலை உயரும் வரை விவசாயிகள் நெல்லை உலர்த்தி சேமிக்கின்றனர .(05)

# சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவம் எழுதிய 'தேசாந்தரம்' குறுநாவல் வெளியீடு!



(ஹஸ்பர் ஏ.எச்)

சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவமின் தேசாந்தரம் குறுநாவல் கதிர்திருச்செல்வத்தின் தலைமையில் நம்மட முற்றத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர்கூடத்தில் வெளியீட்டு விழா இடம் பெற்றது.

நூலின் முதற் பிரதியை கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலக

திட்டமிடல் பணிப்பாளர் பாயிஸுக்கு வழங்கி வெளியீட்டு வைக்கப்பட்டது. நூலுக்கான திறனாய்வைப் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் வ.முரளிதரன் சிறப்பாக வழங்கினார்.

ஏற்புரையை நூலாசிரியர் சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவம்

வழங்கினார்.குறுநாவல் எழுந்த பின்னணி பற்றிக்கூறினார். வெகுவிரைவில் தனது நாவல் வெளிவரவுள்ளமை பற்றியும் குறிப்பிட்டார். (05)

# வேதத்தீவு ஆற்றுக்குக் குறுக்கே பாலம் அமைத்துத்தர கோரிக்கை

(சினாஃபர் நவ்பர்)

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட. சாபி நகர் கிராம சேவையாளர் பிரிவில் வேதத்தீவு ஆற்றுக்குக்குறுக்கே பாலம் ஒன்றை அமைத்துத்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இங்குள்ள பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் விவசாயிகளும் கடமையின்பொருட்டு சென்றுவரவேண்டிய அரச ஊழியர்களும் தினமும் வேதத்தீவு ஆற்றைக் கடந்தே பயணம் செய்துவரவேண்டிய நிலையுள்ளதாகக் கூறுகின்றனர்.

சிறிய இழுவைப்படகே இந்த ஆற்றைக் கடப்பதற்காக இங்கு சேவையில் ஈடுபடுகின்றது.

இந்த இழுவைப்படகில் சைக்கிளைத் தவிர ஏனைய வாகனங்களை ஏற்றிச்செல்லமுடியாதிருப்பதாகவும் கூறுகின்றார்கள்.

இதனால் பயணம் செய்யவேண்டிய பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் பயணம் செய்யவேண்டிய ஏனையோர்களும் தினமும் ஆற்றைக்கடந்து பயணம் செய்வதில் பெரிதும் சிரமப்படுகின்றனர் எனக் கூறுகின்றனர்.

பயிர்ச்செய்கைக்காணிகள் ,தோட்டக்காணிகள் வேதத்தீவுப்பகுதிகளில் காணப்படுவதால்இங்குள்ள விவசாயிகள், கால் நடையாளர்கள் ஆகியோர் அறுவடை மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின்போது விவசாய உபகரணங்களையும் அறுவடைப்பொருள்களையும் கொண்டுசெல்வதிலும் தாம் பெரிதும் சிரமப்படுவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

பாலம் அமைப்பதற்கான அடிக்கற்கள் அசியல் வாதிகளால் இங்கு நாட்டப்பட்டும் இன்னும் இதற்கான பாலம் இங்கு அமைக்கப்படவில்லையென. மக்கள் ஆதங்கப்படுகின்றனர்

மாரி மழை காலத்தின் போதும் இரவு வேளையிலும் ஆற்றைக்கடந்து பயணம் செய்வதில் பெரிதும் சிரமப்படுவதாகவும் உரிய நேரத்திற்கு நோயாளர்களை வைத்தியசாலைக்கு கொண்டுவந்து சேர்ப்பதிலும் தாம் பெரிதும் சிரமப்படுவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

இதுகுறித்து உரிய பகுதியினர் கவனம் செலுத்தவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(05)

## இந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு இறுதிக்குள், உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் அடுத்த இரண்டு மூன்று வாரங்களுக்குள் சுற்றறிக்கை மூலம் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்படும்.

பாடசாலை செல்லாத பிள்ளைகள் குறித்து பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். சுகாதார அமைச்சின் தரவுகளின்படி, குழந்தைகளின் பிறப்பு வீதம் குறைவதால் பாடசாலைக்குச் சேர்க்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் குறைகிறது. இது 0.17சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் 10 மாத கால தாமதம் ஏற்பட்டுள்ளது. ஆட்சேர்ப்பை நிறுத்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு வாரங்களில் நீதிமன்றத் தீர்ப்பு கிடைத்தால், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும். 20,000 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் உள்ளதால் மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், சேவையை விட்டுச் சென்ற மற்றும் வெளிநாடு சென்ற ஆசிரியர்கள் காரணமாக மாகாண மட்டத்தில் 13,500 வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் ஆட்சேர்ப்பு தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பான நீதிமன்ற தீர்ப்பு கிடைத்தால், விரைவில் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள முடியும்.

இதுதவிர, ஆசிரியர் சேவை யாப்பின் படி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான பரீட்சை மார்ச் முதல் வாரத்தில் நடத்தப்பட்டு, மார்ச் இறுதிக்குள் ஆள்சேர்ப்பு நடைபெறும்.

அத்துடன் பாடசாலை மதிய உணவுக்காக 16 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ருளுயுஐனு நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சையை நிறைவு செய்த மாணவர்களுக்காக பெறுபேறுகள் வெளியாகும் வரை நாட்டிலுள்ள 300 நிலையங்களை உள்ளடக்கி பிற்பகல் 2.00 முதல் 4.30 வரை தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல் பாடநெறிகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், கல்வித்துறையை டிஜிட்டல் மயமாக்கும் முன்னோடித் திட்டத்தை மார்ச் மாதத்தில் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்காக ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மைக்ரோசொப்ட் நிறுவனம் ஆதரவு அளிக்கிறது என்றார்.

## நிறைவேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமாக மீண்டும் அதிகளவில் பேசப்பட்டது. ஆனாலும் 2024ஆம் ஆண்டில் தற்போதும் அது பற்றி பேசப்படுகின்றது. ஆகவே குறித்த விடயம் நடைபெறும் செயற்பாடு அல்ல.

அரச ஆணைக்குழுக்கள் பொதுமக்களை ஏமாற்றுகின்றனர். அரச அதிகாரிகள் உரிய முறையில் பணியாற்றுவதில்லை. ஆகவே முறையாக பணியாற்றினால் அனைத்தும் சரியாக இடம்பெறும்.

ஆகவே எந்த அரசியல் கட்சியும் ஆட்சிக்கு வந்தாலும் நாம் கூறும் விடயங்கள் உள்ளன. நாட்டிற்கு அமைதியும் உண்மையும் அவசியமான விடயங்களாகும். அவற்றை அடியொற்றிச் செயற்படுமாறு அரசியல்வாதிகளிடத்தில் கூறுங்கள் என்றார்.

# காரைதீவு பாடசாலைகளில் நியமனம்பெற்ற பிரதி மற்றும் உதவி அதிபர்கள் அறிமுகம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு கோட்ட அதிபர்கள் சங்கத்தால், அண்மையில் வழங்கப்பட்ட அதிபர் சேவை நியமனத்தின் மூலம் காரைதீவுக் கோட்டப் பாடசாலைகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதி, உதவி அதிபர்களை வரவேற்று அறிமுகம் செய்யும் நிகழ்வு, நேற்று (திங்;கட்கிழமை) காரைதீவுக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளரும் உதவிக்கல்விப் பணிப்பாளருமாகிய ஏ.சஞ்ஜீவனின் பங்குபற்றலுடன் காரைதீவு கோட்ட அதிபர்கள் சங்கத் தலைவரும் காரைதீவு சண்முகா வித்தியாலயத்தின் அதிபருமாகிய எம். மணிமாறன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் காரைதீவுக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் பிரதி, உதவி அதிபர்கள் கலந்து கொண்டனர். (05)





# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புகுழு கூட்டம்

(ஹஸ்பர் ஏ.சி)

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அக்குழுவின் இணைத் தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துகோரல, திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அத்தவுல்லா ஆகியோர்களது இணைத் தலைமையில் நடைபெற்றது.

கடந்த குழுக் கூட்டத்தில், பிரதேச செயலக மட்டத்தில் மாவட்ட வர்த்தகர்கள் பயன்படுத்தும் தராசுகளின் முறையான பதிவை முறைப்படுத்தவும், பிரதேச மக்கள் எதிர்நோக்கும் குடிநீர்ப் பிரச்சினை மற்றும் அவற்றின் தற்போதைய நிலை குறித்தும் குழு மீளாய்வு செய்தது.

மாவட்டத்தின் களப்புகள் மற்றும் கரையோரப் பிரதேசங்களில் கண்டல் தாவரங்களின் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்தல், மூதூர் சூரிய சக்திக்கு காணிகளை ஒதுக்குதல், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்காக மாணவர் பஸ் சேவையை பயன்படுத்துதல் ஆகியவை முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளில் அடங்கும்.





கந்தளாய் மணல் சேகரிப்பாளர்கள் மற்றும் போக்குவரத்தாளர்களின் கூட்டு சங்கத்தால் எழுப்பப்பட்ட சில பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி, மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், முப்படைகளின் உயரதிகாரிகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)










"தீவா (Diva) கரத்திற்கு வலிமை" தொழில் முயற்சியாண்மை திறன் விருத்தி நிகழ்வின் வெற்றியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இன்று காலை 9:30 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்ட செயலக, மாவட்ட முகாமைத்துவ திறன் விருத்திப் பயிற்சி நிலையத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

றுழஅநெ ை ஆயயெபநஅநவெ அமைப்புடன் இணைந்து நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டம் பெண் தொழில் முயற்சியாண்மையையும் திறன் விருத்தியையும் மையமாகக் கொண்ட விரிவான பயிற்சி அமர்வுகளை உள்ளடக்கியிருந்தது.

குறித்த பயிற்சி அமர்வுகளில் ஆகச்சிறந்து விளங்கிய யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த நான்கு தொழில் முனைவோருக்கு இந்நிகழ்வில் பணப் பரிசு வழங்கப்பட்டது.

இதில் பிரபாகரன் கவிசலா முதலாமிடத்தையும், டினே சசிக்குமார் மற்றும் சஜிலா சிவலோகநாதன் ஆகியோர் இரண்டாம் இடத்தையும், சிவனேஸ்வரி சிவநாதன் மூன்றாம் இடத்தையும் தமதாக்கிக்கொண்டனர்.

நிகழ்வில், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) கே.ஸ்ரீமோகனன், வடக்கு மாகாண தொழிற்றுறை திணைக்கள பணிப்பாளர் செ.வனஜா, வைத்தியர் சுலோச்சனா, தொழில் முனைவோர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்ததை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணப் பல்கலையில் சர்வதேச தாய் மொழிதினம்

பெப்ரவரி 21 உலகளாவிய ரீதியில் தாய்மொழித் தினமாக அனுட்டிக்கப்படுகிறது.

இந்தத் தினத்தை ஒட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத் துறையினர் இன்று (செவ்வாய்க்கிழமை), நாளை (புதன்கிழமை) ஆகிய தினங்களில் சில சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளனர். எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை ஒன்பது மணியில் இருந்து பிற்பகல் நான்கு மணி வரை "லிங்குவா 2024" எனத் தலைப்பிடப்பட்ட "மொழி: தேசத்திற்கு உள்ளும் அப்பாலும்" என்ற கருப்பொருளிலே வடிவமைக்கப்பட்ட கண்காட்சி ஒன்று கலைப்பீடத்தின் வாயிற்கூடத்திலே இடம்பெறும்.

இந்தக் கண்காட்சியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணரசா ஆரம்பித்து வைப்பார்.

நாளை (புதன்கிழமை) 21ஆம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை கலைப்பீடக் கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெறும் கருத்தரங்கிலே மொழியியல் ஆங்கிலத்துறையின் தலைவர் திருமதி கவிதா நவகுலன், கலைப் பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் ஆகியோர் ஆரம்ப உரைகளை நிகழ்த்துவர்.

அன்றைய நிகழ்வின் திறப்புரையை அமெரிக்காவின் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த பேராசிரியர் அண்ணாமலை நிகழ்நிலையில் ஆற்றுவார். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இருக்கும் இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் சிறப்பு விருந்தினர் உரையையும், மொழியியல் ஆங்கிலத்துறையில் கடமையாற்றும் பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஷ் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் சாமிநாதன் விமல் ஆகியோர் சிறப்புரைகளையும் ஆற்றுவர்.

இந்த நிகழ்வுகளிலே பொதுமக்களும் கலந்து சிறப்பிக்கலாம்.(05)

# கிழக்கில் சாதாரண தர மாணவர்களுக்கான மாகாண முன்னோடிப் பரீட்சை தொடக்கம்



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் கபொத சாதாரண தர பரீட்சைக்கு எதிர்கொள்ளும் மாணவர்களுக்கான மாகாணமட்ட முன்னோடி கணிப்பீடு பரீட்சை நேற்று (திங்கட்கிழமை) ஆரம்பமானது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 17 கல்வி வலயங்களிலும் இந்த முன்னோடி கணிப்பீடுப் பரீட்சை நேற்று (திங்கட்கிழமை) தொடக்கம் மார்ச் மாதம் ஐந்தாம் திகதி வரை நடைபெற இருக்கின்றது என கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தெரிவித்தார்.

அவர் வலயங்களுக்கு வழங்கிய அறிவுறுத்தலில் -

இலங்கையில் க.பொ.த. சாதாரண தரத்தைப் பொறுத்தவரை நான்காவது இடத்தில் இருந்த கிழக்கு மாகாணம் ஆறாம் இடத்தை அடைந்தது. அதாவது தசம் நான்கு புள்ளிகளால் இரண்டு நிலைகள் பின் தள்ள வேண்டிய ஏற்பட்டது .இதற்கு பொருளாதார நெருக்கடி முதல் பல காரணங்களைக் கூறலாம் .

இருந்த பொழுதிலும் தற்போது அவை ஓரளவு தணிந்துள்ள நிலையில் எமது மாணவர்களை சிறந்த அடைவுமட்டத்தை அடைய மாகாண மட்டத்தில் முன்னோடி பரிட்சையை ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

இப் பரிட்சை உரிய கண்காணிப போடு முறைப்படி நடத்தப்பட்டு அந்தந்த வலயங்களில் குழு நிலை மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டு மார்ச் மாதம் ஏழாம் திகதிக்கிடையில் நிறைவு செய்யப்பட்டு ஒன்பதாம் திகதிக்கு இடையில் மாகாணத்துக்கு சகல முடிவுகளும் வந்து சேர வேண்டும் .

இதனை அடிப்படையாக வைத்து எதிர்வரும் குறுகிய காலத்துக்குள் பரிகார வேலை திட்டம், மேலதிக வகுப்பு, விசேட வேலைத்திட்டம் என்பதனை இந்த மாணவர்களுக்காக மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது.

எனவே, இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுமாறு வேண்டுகிறேன்.
- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# யாழ் . மத்திய கல்லூரி புதிய அதிபர் நியமனத்தை எதிர்த்து போராட்டம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு புதிதாக அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று ஆட்சேபனை அடையாளப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை 7.30 மணிக்கு கல்லூரிக்கு முன்பாக மாணவர்களின் கல்வி நடவடிக்கையை பாதிக்காத வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 208 ஆண்டுகளைக் கடந்த பாரம்பரியமிக்க ஓர் ஆண்கள் பாடசாலையில் முதல் முறையாக பெண் அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டதற்கு ஆட்சேபனை தெரிவித்தே இந்தப் போராட்டம் இடம்பெற்றது. . அத்தோடு கல்லூரியின் அதிபராகச் செயற்பட்ட எஸ்.இந்திரகுமாரை மீண்டும் நியமிக்குமாறு மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் வலியுறுத்துகின்றனர். இந்தப் பிரச்சினைக்கு சரியான ஒரு தீர்வை விரைவில் பெற்றுத்தருவதாக கடற்றொழில் அமைச்சரும், கல்லூரியின் பழைய மாணவருமான டக்ளஸ் தேவானந்தா உறுதி வழங்கியதாக பழைய மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (05)

# தொழில் முயற்சியாண்மை வெற்றியாளர் கௌரவிப்பு

தீவா கரத்திற்கு வலிமை தொழில் முயற்சியாண்மை திறன் விருத்தி நிகழ்வின் வெற்றியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்று காலை 9:30 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்ட செயலக, மாவட்ட முகாமைத்துவ திறன் விருத்திப் பயிற்சி நிலையத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிர்வாகத்தில் பெண்கள் அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டம் பெண் தொழில் முயற்சியாண்மையையும் திறன் விருத்தியையும் மையமாகக் கொண்ட விரிவான பயிற்சி அமர்வுகளை உள்ளடக்கியிருந்தது.

குறித்த பயிற்சி அமர்வுகளில் ஆகச்சிறந்து விளங்கிய யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த நான்கு தொழில் முனைவோருக்கு இந்நிகழ்வில் பணப் பரிசு வழங்கப்பட்டது.

இதில் பிரபாகரன் கவிசலா முதலாமிடத்தையும், டினே சசிக்குமார் மற்றும் சஜிலா சிவலோகநாதன் ஆகியோர் இரண்டாம் இடத்தையும், சிவனேஸ்வரி சிவநாதன் மூன்றாம் இடத்தையும் தமதாக்கிக்கொண்டனர்.

நிகழ்வில், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) கே.ஸ்ரீமோகனன், வடக்கு மாகாண தொழிற்றுறை திணைக்கள பணிப்பாளர் செ.வனஜா, வைத்தியர் சுலோச்சனா, தொழில் முனைவோர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# போதைப் பொருள் வாங்கமுடியவில்லை தவறான முடிவெடுத்தார் குடும்பஸ்தர்

போதைப்பொருள் வாங்குவதற்காக தனது சகோதரி மற்றும் தாயாரிடம் ஞாயிற்றுக்கிழமை பணம் கேட்டு , வீட்டில் குழப்பத்தில் ஈடுபட்ட குடும்பஸ்தருக்கு , வீட்டார் பணம் கொடுக்காததால் , தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார்.

குறித்த குடும்பஸ்தருக்கு திருமணமாகி 05 வயதில் பிள்ளை இருக்கும் நிலையில் , அதீத போதைப்பொருள் பாவனையால் , குடும்ப வன்முறைகளிலும் ஈடுபட்டு வந்தமையால் , அவரது மனைவி பிள்ளை அவரை விட்டு பிரிந்து வாழ்வதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.(05)

# காணி உறுதிகள் வழங்கிவைப்பு

(மூதூர் - சினாஃபர் நஃவர்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளை பராமரிக்கும் காணிக்கான உரித்தாணமில்லாத மக்களுக்கு அவர்களின் காணிக்கான காணி ஆவணங்கள் வழங்கும் நடவடிக்கைகள் மூதூர் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் கடந்த வெள்ளிக்கிழமை மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் காணி உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகத்தில் வைத்து காணி ஆவணங்களை வழங்கிவைத்தனர். (05)

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் நிவாரணப் பொதி வழங்கல்





(நூருல் ஹுதா உமர்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தின் போது பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சுமார் 1262 குடும்பங்களுக்கு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) மல்வத்தை பொது நூலகத்தில் நிவாரண பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குப்பட்ட மல்வத்தை, வளத்தாப்பிட்டி ஆகிய கிராமங்களுக்கான நிவாரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிவாரணம் வழங்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்திக்க அபேயவிக்ரம கலந்து கொண்டு நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தார்.

மேலும் இந் நிகழ்வுக்கு சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல் எம் அஸ்லம், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.என். எம் சசீர், எம்.ஆர்.எம் பௌசான், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலக உணவுத் திட்டம் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பொருளாதார நெருக்கடி காலகட்டத்திலும் சுமார் 7000 குடும்பங்களுக்கு நிவாரண பொதிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை தற்போது அம்பாறை மாவட்டத்தில் வழங்கப்படும் நிவாரண வேலைத்திட்டதில் மாவட்டத்தில் உள்ள 20 பிரதேச செயலகங்களில் 05 பிரதேச செயலகங்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டன. அதில் சம்மாந்துறை பிரதேச செயலகமும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் புதிய மாணவிகளை வரவேற்கும் நிகழ்வு







(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யின் இரண்டாயிரத்து இருபத்தி நான்காம் கல்வியாண்டுக்காக தரம் ஆறாம் பிரிவில் புதிதாக இணைந்து கொண்ட மாணவிகளை வாழ்த்தி வரவேற்கும் நிகழ்வு தரம் ஆறு, ஏழு பகுதித்தலைவிகளின் வழிகாட்டலில் இன்று (திங்கட்கழமை) கல்லூரியின் முதல்வர் ஏ.பி.எப். நஸ்மியா சனூஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் கலந்து கொண்டார்.

தரம் ஆறில் இணைந்து கொண்ட புதிய மாணவிகளை தரம் ஏழு கல்வி கற்கும் மாணவிகளால் பாடசாலை முன்றிலில் பூ தூவி மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்பு பதாகைகள் ஏந்திய வண்ணம் வரவேற்கப்பட்டதுடன் நாட்டின் தேசிய, பாடசாலை கீதம் மற்றும் கல்லூரியின் ஒழுக்க விழுமியங்களை உள்ளடக்கிய துண்டுப்பிரசுரம் மற்றும் இனிப்புக்கள் வழங்கி வைக்கப்பட்டன.

விஷேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட தரம் ஆறு, ஏழு மாணவிகளுக்கான காலை ஆராதனை நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர் ஆகியோரால் நற்சிந்தனைகள் மற்றும் கல்வி தொடர்பான ஊக்கப்படுத்தும் உரைகள் இடம்பெற்றன. ஸ்மார்ட் கிளாஸ் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் புதிய மாணவிகளிடம் கலந்துரையாடி கல்லூரி தொடர்பான முதல் நாள் அனுபவத்தின் பின்னூட்டத்தை கேட்டறிந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிகழ்வில் பிரதிஅதிபர்களான எஸ்.எஸ்.எம். மசூது லெவ்வை, ஏ.எச்.நதீரா, உதவி அதிபர் என்.டி.நதீகா உட்பட பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# அல்லைப்பிட்டியில் விபத்து பெண் பரிதாபமாக இறப்பு

## பஸ்ஸிலிருந்து இறங்கும்போது அசம்பாவிதம்

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

மணக்கும்பான் 4 ஆம் வட்டாரம் பகுதியை சேர்ந்த தங்கரத்தினம் தனேஸ்வரி (வயது 46) என்பவரே உயிரிழந்துள்ளார்.

பஸ்ஸிலிருந்து இறங்கியபோது விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிககப்படுகின்றது. தனேஸ்வரி முழுமையாக இறங்குவதற்கு முன்னர் பஸ் நகர்த்தப்பட்டதால் அவர் நிலைதடுமாறு வீழ்ந்து உயிரிழந்திருக்கலாம் என்ற கோணத்தில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.

படுகாயமடைந்த தனேஸ்வரி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். (05)

# சந்தேகநபரின் அலைபேசியை திருடி விற்ற குற்றச்சாட்டில் பொலிஸார் கைது

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரொருவரின் கையடக்கத் தொலைபேசியை 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்ததாக கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அம்பாறை பொலிஸ் நிலையத்தில் சாரதியாகக் கடமையாற்றுகிறார்.

2023 ஜூலை 30 அம்பாறை பிரதேசத்தில் நிகழ்வொன்றின் போது இடம்பெற்ற சம்பவம் ஒன்று தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நபரொருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரின் கையடக்கத் தொலைபேசியும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதன்போதே பொலிஸ் சாரதியான கான்ஸ்டபிள், கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 58 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசியை 5 ஆயிரம் ரூபாவுக்கு வெளிநபர் ஒருவரிடம் விற்பனை செய்துள்ளார்.

இந்த கையடக்கத் தொலைபேசியின் உரிமையாளர் இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தர் அம்பாறை குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# கடற்கண்காணிப்புக்காக விமானம் வழங்குகிறது அமெ.

இலங்கை கடற்பகுதியினை பாதுகாப்பதற்காக விமானமொன்றை வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

அமெரிக்க இராஜதந்திரியான டோலண்ட்லு குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

விசேட கூட்டத்தில் கலந்துகொண்ட அவர், இலங்கைக்கு 'கிங் ஏர்' விமானமொன்று வழங்கப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கிங் ஏர் விமானமானது, இந்த வருடத்திற்குள் இலங்கைக்கு பெற்றுக் கொடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கையின் கரையோரப் பாதுகாப்பிற்காக இலங்கையின் பாதுகாப்புப் படையினருக்கு அமெரிக்கா ஏற்கனவே படகுகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனுக்கு எதிராக சவப் பெட்டியுடன் நேற்று போராட்டம்

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் அதிகார துஷ்பிரயோகத்துக்கு ஆளாகாமல் செங்கலடி பிரதேச செயலாளர் சட்டப்படி தமது கடமையை நிறைவேற்ற வேண்டும் எனவும் அமைச்சரின் ஏறாவூர் பற்று பிரதேச அபிவிருத்தி குழு தலைவர் பதவியை பறிக்குமாறும் தெரிவித்து கல், மண், கிறல் அகழ்வில் சட்ட ரீதியாக ஈடுபட்டு வரும் இரண்டு பேர் சவப்பெட்டியுடன் மட்டக்களப்பு - செங்கலடி பிரதேச செயலகத்துக்கு அருகில் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை நேற்று ஈடுபட்டுள்ளனர்.

கல், மண், கிறவல் என்பனவற்றுக்கு சட்ட ரீதியாக அனுமதி பெற்று அகழ்வில் ஈடுபட்டு வருபவர்களின் 2024ஆம் ஆண்டு அனுமதிப்பத்திரத்தை, இராஜாங்க அமைச்சரின் சிபாரிசு இருந்தால் மட்டும் புதுப்பிக்க முடியும் என பிரதேச செயலாளர் அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்க மறுத்து வரும் நிலையிலேயே, இராஜாங்க அமைச்சரின் அதிகார துஷ்பிரயோகத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பாக உண்ணாவிரத போரட்டத்தில் இறங்கியுள்ள இருவரும் ஊடகங்களுக்கு தெரிவித்ததாவது:

செங்கலடி பிரதேசத்தில் கல், மண், கிறவல் என்பனவற்றுக்கு சட்ட ரீதியாக அனுமதி பெற்று பலர் அகழ்வுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், 2023 டிசெம்பர் 31 அனுமதிப்பத்திரம் காலாவதியானதையடுத்து, 2024ஆம் ஆண்டு அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு போராட்டக்காரர்கள் இருவரும் பிரதேச செயலகத்துக்குச் சென்றபோதே பிரதேச செயலாளர் அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்க மறுத்துள்ளார்.

இதனையடுத்து, மாவட்டச் செயலரைச் சந்தித்து பல பிரச்சினைகள் தொடர்பில் விடயங்களை முன்வைத்தோம். அவர் அந்த கடிதத்தை பிரதேச செயலாளருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால், இதுவரை பதில் எதுவும் இல்லை. எனவே, நாங்கள் புதிதாக ஒன்றும் கேட்கவில்லை. ஏற்கனவே கல், மண், கிறவல் அகழ்வதற்கு அது சார்ந்த திணைக்களங்கள் பரிசோதனை செய்து, அதற்கான அனுமதியை வழங்கி நாங்கள் அகழ்வுப் பணியினை மேற்கொண்டு வருகிறோம்.

ஒவ்வொரு கல்குவாரியிலும் 10க்கு மேற்பட்டவர்கள் வேலை செய்கின்றனர். இவ்வாறு மொத்தமாக 300க்கு மேற்பட்டவர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்களது வாழ்வாதாரமே இந்த அகழ்வுப் பணிதான்.

நாங்கள் ஏற்கனவே வழங்கிய அனுமதியை புதுப்பித்துத் தருமாறு முறைப்படி விண்ணப்பித்தோம். ஆனால், எங்களுக்கு சட்டப்படி ஆவணங்கள் இருந்தும் வியாழேந்திரன் சிபாரிசு செய்யும் நபர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்க முடியும் என பிரதேச செயலாளர் கூறி, அனுமதியை புதுப்பிக்க மறுத்து வருகிறார்.

இராஜாங்க அமைச்சரை தனிப்பட்ட முறையில் சந்தித்தால் மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்றால் இதில் யார் அதிகாரி?

அரசியல் ரீதியாகவா அல்லது பேரம் பேசுவதற்காகவா அமைச்சரை சந்திக்க வேண்டும்? எனவே, இவ்வளவு காலமும் அனுமதிப்பத்திரம் வழங்குவதில் அரசியல் இருந்ததே இல்லை. இம்முறைதான் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதில் அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டுள்ளனர்.

எங்கள் பிரதேசத்தில் அபிவிருத்திக் குழு என்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டு அவருக்கு ஏற்ற மாதிரி அதிகாரிகளை துஷ்பிரயோகம் செய்து வருகின்றார்.

எனவே, இந்த அதிகார துஷ்பிரயோகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அரச சேவை, அரச சேவையாக இயங்க வேண்டும் என்பதற்காக தீர்வு எட்டும் வரை, சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொள்ள தீர்மானித்து இருந்து வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

## மின்சார சபை முன்வைத்துள்ள

# கட்டணக் குறைப்புக்கான தரவுகளை தொழில்நுட்ப ரீதியில் ஆராயவேண்டும்

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

மின்கட்டணக் குறைப்புக்காக மின்சார சபை முன்வைத்துள்ள தரவுகளை தொழில்நுட்ப ரீதியில் பரிசீலனை செய்ய வேண்டும். மின்சார சபை அதிகாரிகள் தவறான தரவுகளைக் கடந்த காலங்களில் சமர்ப்பித்துள்ளார்கள். ஆகவே இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நாட்டு மக்களின் பக்கம் இருந்து செயற்பட வேண்டும். இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்லி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

மின்சார சபை முன்வைத்துள்ள மின்னுற்பத்திக்கான செலவு உள்ளிட்ட பல தரவுகள் பொய்யானவை. மின்நிலையங்களின் நிலையான கட்டணம் முறையற்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.மின்சார சபையின் ஒருசில அதிகாரிகள் கணிதத்தில் தேர்ச்சிப் பெற்றுள்ளார்கள். இந்த திறமையை கொண்டு அவர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட முயற்சிக்கிறார்கள்.

மின்கட்டணக் குறைப்புக்காக மின்சார சபை சமர்ப்பித்துள்ள தரப்படுத்தல்களின் உண்மைத் தன்மையை ஆராய்வது பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கடமையாகும். நாட்டு மக்களுக்காக ஆணைக்குழு தன் கடமைகளைப் பொறுப்புடன் செயற்படுத்தவேண்டும்.

மின்கட்டமைப்பின் நெருக்கடியால் தேசிய பொருளாதாரம் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மாத்திரம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளின் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கைத்தொழிற்றுறையில் மின்பாவனைக்கான கேள்வி நூற்றுக்கு 20 சத வீதத்தால் குறைவடைந்துள்ளது. சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் ஆகிய நாடுகளின் மின்கட்டணத்துக்கு அமைவாக இலங்கையில் மின்கட்டணம் சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கைத்தொழிற்றுறையில் அதிக போட்டித்தன்மை நிலவும் வியட்நாம், பங்களாதேஷ் மற்றும் தென்னிந்தியாவுக்கு இணையாக இலங்கையில் 40 சதவீதத்தால் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கையில் கைத்தொழிற்றுறை பெரும் சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது. குறைந்தளவான மின்கட்டணம் உள்ள போட்டித் தன்மையான நாடுகளுக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் செல்கிறார்கள். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு விட்டோம், அரச வருமானத்தை அதிகரித்து விட்டோம் என ஆளும் தரப்புக் குறிப்பிடுகிறது. 2020ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு தனிநபரிடமிருந்தும் நேரடி மற்றும் மறைமுக வரிகள் ஊடாக ஒரு இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டுள்ளது. பொருளாதாரம் ஒடுக்கப்பட்டுள்ளதால் மேலும் 1 இலட்சம் ரூபாவை அறவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள நிலையில் மக்களின் பக்கம் இருந்து மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட வேண்டும்.அதிகளவான மின்கட்டணம் மற்றும் எரிபொருள் விலை உயர்வு காரணமாக 2028 ஆம் ஆண்டளவில் வெளிநாட்டு அரசமுறை கடன்களை செலுத்த முடியாமல் போகும். யார் ஆட்சி செய்தாலும் தற்போதைய நிலை நீடித்தால் 2028 ஆம் ஆண்டு நாடு மீண்டும் வங்குரோத்து நிலையை அடையும்.

இவ்வாறான பின்னணியில் மின்சார சபை தொடர்பில் விசேட கவனம் செலுத்துவது இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.மின்சார சபையின் செலவுகளை கட்டுப்படுத்தல் அத்தியாவசியமானது.மக்களுக்காக ஆணைக்குழு செயற்படாமல் இருந்தால் ஆணைக்குழுவுக்கு எதிராக மக்கள் ஒன்றிணைவார்கள் என்றார்.

# பெண் கான்ஸ்டபிளுக்கு பேருந்தில் தொல்லை 45 வயது மதிக்கத்தக்கவர் சந்தேகத்தில் கைது

பெண் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு-பொதுப் போக்குவரத்துப் பேருந்தில் பாலியல் தொல்லை கொடுத்தார் என்கிற குற்றச்சாட்டின் கீழ் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சிறுவர் மற்றும் பெண்கள் பணியக தலைமையகத்தில் பணியாற்றும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கே பாலியல் தொல்லை கொடுக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பொறியியல் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் 43 வயதுடைய பாதுக்க மதுலாவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர் என்று கூறப்படும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் கொழும்பிலிருந்து இ.போ.ச பஸ்ஸில் தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோதே சந்தேகநபர் அவருக்குப் பாலியல் தொல்லை கொடுத்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# கசிப்பு நிலையம் நேற்று மட்டக்களப்பில் முற்றுகை

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள முனைக்காடு களப்பு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை நேற்று பொலிஸார் முற்றுகை இட்டனர்.

இதன்போது, 150 போத்தல் கசிப்புடன் ஒருவரை கைது செய்ததுடன், 3 இலட்சத்து 50 ஆயிரம் மில்லி மீற்றர் கோடா, உற்பத்தி உபகரணங்கள் மற்றும் மோட்டர் சைக்கிள் ஒன்று மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நொச்சிகுளம் பகுதியில் துப்பாக்கி சூடு வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



மன்னார் - மதவாச்சி பிரதான வீதி,உயிலங்குளம் - நொச்சிகுளம் பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) நொச்சிக்குளம் பகுதியை சேர்ந்த ஒருவரை இலக்குவைத்து துப்பாக்கி பிரயோகம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், மேற்படி கிராம மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று (திங்கட்கிழமை) காலை 8.30 மணியளவில் நொச்சிகுளத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தனது கிராமத்தில் உள்ள தனது வயலில் நீர் பாய்ச்சிக்கொண்டு இருந்த வேளையில் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் ஒரு ரி-56 ரக துப்பாக்கி மூலம் அந்த விவசாயி மீது சுட்ட போதும் அவர் மயிரிழையில் உயிர் தப்பினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கடந்த சில காலமாக இந்த கிராமத்து மக்களின் மீது ஒரு குழுவினர் தாக்குதல் நடத்தி இது வரை மூவர் உயிரிழந்துள்ளனர் என அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த கிராமத்துக்கு பொலிஸ் காவல்போடப்பட்டும் அதையும் மீறி குறித்த சம்பவம் தொடர்வதாகவும், இன்றைய தினம் (நேற்று) நடைபெற்ற சம்பவத்தை கண்டித்தும் நொச்சிக்குளம் கிராம மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகள் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பதாதைகளில் 'கொலைகாரர்களுக்கு ஆயுதம் கொடுத்தது யார்?' 'எங்களை பாதுகாப்பது அரசின் கடமை' "எங்கள் உயிருக்கு பாதுகாப்பு தாருங்கள்' எங்கள் மக்களுக்கு நீதி இல்லையா? யார் தருவது' போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

இந்தத் துப்பாக்கிசூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் உடன் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக மன்னார் மற்றும் உயிலங்குளம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தை தொடர்ந்து நேற்று (திங்கட்கிழமை) காலை முதல் மன்னார் பிரதான பாலம் ஊடாக மன்னார் நகருக்கு வருகை தரும் அனைத்து வாகனங்களும், பொலிஸாரால் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# தலைமன்னார் 10 வயதுச் சிறுமி கொலை வழக்கில் சந்தேகநபருக்கு விளக்கமறியல்

*மன்னார், தலைமன்னார், ஊர்மனை கிராமத்தில் 10 வயது சிறுமி ஒருவர் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் இன்று திங்கட்கிழமை (19) மதியம் உத்தரவிட்டார்.*

*தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் 10 வயது சிறுமி ஒருவர் கடந்த 16 ஆம் திகதி காலை சடலமாக மீட்கப்பட்டார்.*

*குறித்த சம்பவம் தொடர்பில் திருகோணமலை குச்சவெளி பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.*

*சந்தேக நபரை பொலிஸார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய 48 மணி நேர பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தினர்.*

*இந்நிலையில் குறித்த சந்தேக நபர் இன்று திங்கட்கிழமை (19) பொலிஸாரினால் மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்*

*இதன்போது மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகள் உயிரிழந்த சிறுமி சார்பில் மன்றில் முன்னிலையாகினர்.*

*விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.*

## புலிகளின் தங்கத்தை தேடி இன்றும் அகழ்வு தொடரும்



விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்ட தங்க ஆபரண புதையல் தொடர்பில் நேற்று (திங்கட் கிழமை) அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸாரால் கடந்த 16 ஆம் திகதியன்று குறித்த அகழ்வு பணிக்கான அனுமதி நீதிமன்றில்



கோரப்பட்ட நிலையில், மன்றின் அனுமதியுடன் திங்கட்கிழமை அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடு–குமாரசாமிபுரம் பகுதியில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றிலேயே விடுதலைப்புலிகள் அமைப்பால் யுத்த காலப்பகுதியில் தங்க ஆபரணங்கள் புதைக்கப்பட்டுள்ளன எனத் தகவல் கிடைத்த நிலையில் திங்கட்கிழமை பகல் 2.30 மணியளவில் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன்போது நீதிவான், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், கிராம சேவையாளர், உள்ளிட்டோர் முன்னிலையில் குறித்த அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.(05)

## இஸ்லாமிய நிவாரணக் குழுவின் காரியாலயம் மன்னாரில் திறப்பு



மன்னார் மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை இஸ்லாமிய நிவாரண குழு எனும் வடமாகாணத்திற்குரிய காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிறுவனம் கொழும்பு மற்றும் புத்தளத்தில் தனது சேவையை செய்து வருகிறது. இந்தக் குழுவின் நோக்கம் வறுமையில் இருக்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இயலாது வறுமைப்படுகின்ற அவர்களின் தொழிலை தொடர அவதிப்படுகின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்நோக்கி செல்ல உதவுகின்றது. பாடசாலை கல்விக்காக உதவுகின்றது கடன் உதவிகள் வழங்குகின்றது.

இந்த காரியாலயத்தை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் திறந்து வைத்தார். மன்னார் மாவட்ட ஓய்பெற்ற அரசாங்க அதிபர், பொதுப்பணிப்பாளர், அரச சார்பற்ற தேசிய செயலாளரும் முஸ்லீம் ஹான்ட் திட்டமிடல் முகாமையாளர,; வடமாகாண நிகழ்ச்சி திட்ட ஒருகிணைப்பாளர், வருமானத்துறை அபிவிருத்தி சபை உதவி பணிப்பாளர் ஐ எஸ் ஆர்சி தொழில் நுட்ப அதிகாரி, மாவட்ட செயலக அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் அனைவரும் இந் நிகழ்வில் கலந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.02.2024இல் வெளியிடப்பெற்றது.